விலை சதம் 60

பக்கங்கள் — 10

# ஈழநாடு
## வார மலர்

THE EELANADU VARAMALAR

மலர் 22 | வைகாசி 26 | றஜப் 24 | ஞாயிற்றுக்கிழமை | (8—6—80) | இதழ் 119

புத்தூர் நாகதம்பிரான் ஆலயத்தில் 9-6-80 திங்கட் கிழமை நடைபெறும் பொங்கல் தினத்தன்று ஆலயமுன்றலில் அமைந்திருக்கும் அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் எமது 'அண்ணா' தயாரிப்பு பொருட்களில் ஏதாவது ஒன்றினை வாங்கி, இனாம் பொருட்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்
அண்ணா தொழிலகம்
இணுவில்

சகாய விற்பனையும் அன்பளிப்பும்
9-6-80 திங்கள் "புத்தூர் நாகதம்பிரான் பொங்கல்" திருவிழாவில் 'மில்க் வைற்' தயாரிப்புகள் யாவும் சகாய விற்பனையுடன், அன்பளிப்புகளும், 'மில்க் வைற்' மேலுறைகளுக்கான சிறந்த பரிசுகளும் வழங்கப்படும்.
மில்க் வைற் — யாழ்ப்பாணம்

# எம்.ஜி.ஆரின் புதிய மந்திரிகள் விபரம் இன்றிரவு தெரியும்

## நாளை பதவி ஏற்பு

(சென்னை)

தமிழகத்தில் நாளை திங்கட்கிழமை ஆட்சிப் பொறுப்பை ஏற்க இருக்கும் அ. தி. மு. க. அமைச்சரவையின் விபரங்கள் இன்று இரவு வெளியிடப்படும் என்று தமிழக செய்திகள் தெரிவித்துள்ளன.

புதிய அ. தி. மு. க. அமைச்சரவையில் அங்கம் வகிக்க இருக்கும் உறுப்பினர்களின் பெயர்கள் இறுதியாக்கப்பட்டு விட்டது என்றும், இன்று இரவு புதிய அமைச்சரவை பெயர்ப் பட்டியலை தமிழக கவர்னர் திரு பிரபுதாஸ் பட்வாரியிடம் திரு. இராமச்சந்திரன் கையளிப்பார் என்றும் இதை அடுத்து அமைச்சரவை விபரங்கள் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

நாளை பகல் புதிய அமைச்சரவை சென்னை கலைவாணர் அரங்கில் பதவி ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதவிப் பிரமாணம் எடுத்த பின்னர் திரு. இராமச்சந்திரன் அண்ணா சாலையில் உள்ள அண்ணா — பெரியார் சிலைகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் உறுதிமொழி எடுப்பதுடன் பொது மக்களுக்கும் உரையாற்றுவார். (இ)

## தமிழக வானொலியில் நாளை இரவு

(சென்னை)

அ. தி. மு. க. அமைச்சரவை பதவி ஏற்பு வைபவம், அண்ணா சிலைக்கு அருகே திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உறுதிமொழி எடுக்கும் வைபவம் ஆகிய நிகழ்ச்சிகள் தொடர்பான விசேட செய்தி மடல் ஒன்று நாளை திங்கள் இரவு 8-30 மணிக்கு சென்னை, திருச்சி நிலையங்களில் ஒலிபரப்பப்படும். (இ)

### உத்தரப் பிரதேச முதல்வர் விவகாரம்
## சஞ்சய் காந்தி நியமனம் இந்திரா நிராகரிப்பு!

புதுடில்லி, ஜூன் 7

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தனது மகன் திரு. சஞ்சய் காந்தியை உத்திரப்பிரதேச முதல்வராக நியமிக்குமாறு விடுத்த கோரிக்கையை நிராகரித்தார்.

உத்திரபிரதேச மாநில அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் இந்திரா காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் தமது மாநில முதல்வராக திரு. சஞ்சய் காந்தியை ஏகமனதாகத் தெரிவுசெய்திருந்ததுடன் அவரை கட்சியின் மேலிடம் ஏற்றுக்கொள்ளா விட்டால் பிரதமர் திருமதி காந்தியையே புதிய முதல்வரைத் தெரிவுசெய்யவேண்டுமென்று தீர்மானித்திருந்தனர்.

மாநில சட்டசபை உறுப்பினர்களின் கோரிக்கையை நிராகரித்துள்ள பிரதமர் திருமதி காந்தி, கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் தெரிவுசெய்யும் ஒருவரே மாநில முதல்வராக நியமிக்கப்படுவார் என்று கூறினர்.

யாரை முதலமைச்சராக நியமிப்பது என்பது பற்றி திருமதி காந்தி எதுவும் கூறவில்லை. (கு)

## ஆசிரிய நியமனங்கள் யாவும் மறுபரிசிலனை செய்யப்படும்!
### கல்வி அமைச்சர் 'ரனில்' தகவல்

(கொழும்பு)

ஆசிரிய நியமனங்கள் யாவும் மறுபரிசிலனை செய்யப்படவுள்ளதாக கல்வி, இளைஞர் விவகார வேலைவாய்ப்புகள் அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்க காலங்களில் வழங்கப்பட்ட நியமனங்கள் மட்டுமன்றி இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் வழங்கப்பட்ட நியமனங்கள் தொடர்பாகவும் விசாரணை நடாத்தப்படவுள்ளதாக நேற்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் அமைச்சர் கூறினார்.

நியமனங்களைப் பரிசீலனை செய்ய குழுவொன்று நியமிக்கப்படுமா என்று நிருபர் ஒருவர் கேட்டபோது "குழுவொன்றையோ அல்லது ஆணைக்குழுவையோ நியமித்து பொருட்செலவையும் திறமையான நிர்வாக அதிகாரிகளின் நேரத்தையும் வீணாக்க விரும்பவில்லை. மிக விரைவில் இதற்கென அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார்" என்று அமைச்சர் பதிலளித்தார். (கு

## மரணவிசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் கடந்த வியாழனன்று நடைபெற்ற மறியல் போராட்டத்தின்போது மரணமான தொழிற்சங்கவாதி கே. டி. சோமபாலாவின் மரண விசாரணையை கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிவான் இம்மாதம் 11-ம் திகதி வரை ஒத்திவைத்தார். (இ)

சர்வதேச ரோட்டரி இயக்கத்தின்
75-வது ஆண்டு நிறைவுவிழா
காலம்: 9-6-80 திங்கட்கிழமை மாலை 6 30மணி
இடம்: வீரசிங்கம்மண்டபம்,யாழ்ப்பாணம்.
பிரதம விருந்தினர்;
திரு வெ. யோகேஸ்வரன்
பா. உ. — யாழ்ப்பாணம்
திருமதி ச.யோகேஸ்வரன்
இராமநாதன் நுண்கலைக்கல்லூரியின் நாட்டிய நிகழ்ச்சியும் வரணியூரானின் நகைச்சுவை நாடகமும் இடம்பெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தலைவர், யாழ் ரோட்டரிக்கழகம். (5977)

### 'அதிபர் இடமாற்றம் இன்றேல் உண்ணாவிரதம் தொடரும்'
## பெற்றோர் குழு அழைப்பை மாணவர்கள் நிராகரித்தனர்
### யாழ். மத்திய கல்லூரி பிரச்னை குறித்து மாணவர்களை மீண்டும் சந்திக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் விவகாரம் குறித்து மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தத் தெரிவுசெய்யப்பட்ட பெற்றோர் ஆசிரியர் குழுத்தலைவர் நேற்று நண்பகல் மாணவர் பிரதிநிதிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது, அவர்கள் அதனை நிராகரித்தனர்.

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றுக் காலை அதிபர் திரு. கே. வி. சண்முகநாதன் தலைமையில் நடந்த பெற்றோர், ஆசிரியர் கூட்டத்தில் மாணவர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைநடாத்த ஏழு பேர் கொண்ட குழுவொன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இக்குழுவில் திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியம் (தலைவர்), வி. ஜே. சப் டேவிட், டொமினிக் அத்தியட்சகர் இன்ஸ்லி விக்கிரமசூரியா, ஜெயபாதி எம். ஜெயசேகரா, ... ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்கூட்டம் முடிவடைந்ததும், குழுத்தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம், கல்லூரிக்கு வெளியே திரண்டுநின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களிடம் "உங்கள் பிரச்னை பற்றி பேச்சுவார்த்தை நடாத்த ஐந்து பிரதிநிதிகளை அனுப்புங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

"எங்களுக்குக் குழுவோ பேச்சுவார்த்தையோ தேவையில்லை. அதிபர் மாறவேண்டும்" என மாணவர்கள் தெரிவித்தனர்.

மீண்டும், மீண்டும் திரு எம். சி. சுப்பிரமணியம், மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். மாணவர்கள் "அதிபரை மாற்றுங்கள் அதுதான் எங்கள் கோரிக்கை" என்றனர்.

"அதிபர் மாற்றப்படாவிடில் மீண்டும் திங்கள் உண்ணாவிரதம் ஆரம்பமாகும்" என்றும் மாணவர்கள் தெரிவித்தனர்.

அச்சமயம் வடமாநில கல்வி அதிபர் திரு ரி. மாணிக்கவாசகர் கூட்டம் முடிந்து சென்றுகொண்டிருந்தபோது "வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டீர்களே" ஒரு வார அவகாசம் தந்தோம் எங்கே அதிபர் இடமாற்றம்" என்று கேட்டனர்.

பெற்றோர் குழுவை மாணவர் பிரதிநிதிகள் சந்திக்க மறுத்ததைத் தொடர்ந்து, குழுத் தலைவர் அங்கிருந்து சென்றார். மீண்டும் மாணவர் பிரதிநிதிகளைச் சந்திக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

காலையில் நடந்த கூட்டத்திற்கு 9-ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் பெற்றோருக்கு மட்டுமே அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

அழைப்புக் கிடைக்கவில்லையென பெற்றோர்கள் பலர் புகார் செய்தனர். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், மண்டபத்திற்கு அருகில் உள்ள வீதியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் திரண்டு நின்றனர். கூட்ட இறுதியில் பல மாணவர்கள் மண்டபத்திற்குள்ளும் காணப்பட்டனர்

இக்கூட்டத்தில் வடமாநில கல்வி அதிபர் திரு. ரி மாணிக்க

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்வி

டிசம்பர், 80-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் லண்டன் IAB IAA பரீட்சைக்குரிய புதிய வகுப்புகளும், பிரமன் பரீட்சைக்குரிய வகுப்புகளும் உடனே ஆரம்பமாகின்றன. ஸ்ரீ மீனாட்சி மெமோரியல் கல்லூரி, 55, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5955

### தவறிவிட்டது

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு செம்மணி ஊடாக வந்த ஸ்கூட்டரின் திறப்புகள் மூன்று அடங்கிய பிறவுண் நிறப் பேர்ஸ் தவறிவிட்டது. ஒரு திறப்பில் "JAWAN" என்று பொறிக்கப்பட்டுள்ளது. கண்டெடுத்தோர் யாழ்ப்பாணம் வாசல் ஸ்ரூடியோவில் ஒப்படைக்கவும். 5975

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

7 ஸ்ரீ 9000 தொடரிலக்க சொந்தப் பாவிப்பிலிருந்த புதிய நிலையிலுள்ள ஹொண்டா மொடல் CB 125 S உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்கட்கு யாஸ்மின் 43, பிரசார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8228 (5967)

கோப்பாய் தெற்கு இராசபாதையில் 5 பரப்பு தோட்டக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரில். செல்வி. ஞா. தயாநிதி, பழை, தெரு, கோப்பாய் தெற்கு. 5571

### விற்பனைக்கு

மல்லாகம் அ. மி. த. க. பாடசாலைக்கு அருகாமையில் 8 பரப்புக் குடியிருப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: வனசாம்பு, குமரி, மாவிட்டபுரம் 5950

B. M. C. 700 F. G. வானுடன் விற்பனைக்கு உண்டு. கொல்டன் கெமிஸ்ட் அன்ட் டிஸ்பென்சறி, தெல்லிப்பளை. 5969

24ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள மொறிஸ் மைனர் லொறி விற்பனைக்குண்டு S. தங்கநாதன் J. P., மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு. 5942

கோம்பயன் தெருவில் 6½ பரப்புடன் கூடிய கல்வீடு சகலவசதியுடன் விற்பனைக்குண்டு கடித மூலம் தொடர்பு கொள்க விளம்பர இல: 5957, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5957

கலப்பற்ற அல்சேஷன் குட்டிகள் விற்பனைக்குண்டு. (பெரிய இனம்) ஒன்று 750/- ரூ. பாலசுந்தரம் (மாஸா) நாகபூஷணி வீதி, கோண்டாவில் கிழக்கு 5963

### தேவை

வெளிநாட்டுக் கொம்பனியின் யாழ்ப்பாண ஸ்தாபனத்தில் ஆங்கிலத் தகுதியுள்ள வர்த்தக அனுபவமுள்ள ஆணும் டைப்பிங் அனுபவமுள்ள பெண்ணும் இருபது வயதுக்கும் முப்பதைந்து வயதுக்கும் இடைப்பட்டோர் தேவை. 16-06-80 க்கு முன் விண்ணப்பிக்கவும் வரம்ப மூர்த்தி, லொ சில்க் இன்டஸ்ரீஸ், நீர்வேலி. 5966

க. பொ. த. உயர்தரப் பரீட்சை (NEW A/L 81) சோதனைக்கு பௌதிகத்தில் டியூசன் வீட்டில் கொடுக்க திறமையான ஆசிரியர் / ஆசிரியை தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் சந்திக்கவும் 718, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5968

## நீதிபதியாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டியைச் சேர்ந்த திரு. சிங்கராயர் தேசதாசன் மே மாதம் முதல் சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்ற நீதிபதியாக நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் பழைய மாணவரான இவர் மூன்று தீவு நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பணியாற்றி வந்தார். (ஞ)

## காங்கேசன்துறை - ஊறணி
# புனித அந்தோனியார் ஆலய கட்டிட நிதி

இவ்வாலயம் முற்றிலும் புனர் நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளதால் இதற்கு வேண்டிய நிதியுதவி நல்குமாறு அன்பர்களைப் பணிவுடன் வேண்டுகின்றோம். உற்சவ ஆரம்பம்: 8 6-80 திருநாட்டனி: 13-6-80

நிதி உதவி தர விரும்புபவர்கள் பங்குத்தந்தையிடம் நேரிலோ தபால் மூலமோ செலுத்தலாம்.

**ஆலய புனரமைப்புச் சபை.**

5980

## புனித அந்தோனியார் திருவிழா

(பண்ணூர்)

பண்ணூர் தன்னாடி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 12-ம் திகதி மாலை ஆராதனையும் 13-ம் திகதி மன்னார் பங்குத்தந்தை அருட்திரு டிமல் அடிகளார் பாடற்பூசைப் பலியும், அதைத் தொடர்ந்து புனித அந்தோனியார் திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் நடைபெறவிருக்கிறது.

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழு
## தேங்காய் ஏலவிற்பனை கேள்வியாளர்களை பதிவு செய்தல்

இலங்கை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் உள்ள தென்னந் தோட்டங்களில் பறிக்கப்படும் தேங்காய்களை கேள்வி மூலம் பெற விரும்புவோர் தங்கள் பெயர், விலாசம் ஆகியவற்றை கீழ்த் தரப்படும் காரியாலயத்தில் கடித மூலமோ அல்லது நேரிலோ பதிவு செய்து கொள்ளவும்.

உதவிப் பணிப்பாளர்
காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,
தோட்ட பரிபாலன பகுதி
எ. பி. சி. கட்டடம்,
5976 கண்டி,
7-06-1980

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

**தங்க, வைர நகை வியாபாரம்**

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்.

## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

மூளாய், சுழிபுரம்.
பதிவு இல. J 82 / 4-4-35

# விசேட பொதுக்கூட்டம்

அங்கத்தவர்களே!

1972 ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட இலக்கம் கீழ் ஆக்கப்பட்ட விதி 18 (1)க்கு அமைய யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்க உதவி ஆணையாளர் க. மகாதேவா அவர்கள் J 82 இலக்கம் இட்ட 3-6-80 திகதிக் கடிதப்படி கூட்டுறவுப் பரிசோதகர் மு. தம்பிராசா ஆகிய எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அமைய என்னால் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாய் விசேட பொதுச்சபைக் கூட்டம் சித்தன்கேணி வட்டு இந்துக் கல்லூரி மண்டபத்தில் 29-6-80 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆரம்பித்து நடத்தப்படும். தாங்களும் சமூகமளிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிகழ்ச்சி நிரல்

1. 9 புதிய இயக்குநர் சபை அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.
2. தலைவர் தெரிவு.

கூட்டுறவுக் காரியாலயம் யாழ்ப்பாணம். 4 6-80.
மு. தம்பிராசா அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்.

குறிப்பு: கூட்டத்துக்கு வரும்போது அனுமதிச் சீட்டாக அரசாங்க அடையாள அட்டை அல்லது வைத்தியசாலை அங்கத்துவ அட்டையைக் கொண்டுவரவும். இதுவரை அங்கத்துவ அட்டை பெறாதவர்கள் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய அறிவித்தல்: இயக்குநர் சபைக்குத் தெரிவு செய்யப்பட விரும்பும் அங்கத்தவர்கள் சங்கக் காரியாலயத்திலிருந்து பெறப்படும் பத்திரங்களில் நியமனங்கள் தாக்கல் செய்தல் வேண்டும்.

உபவிதி 27 (A) 1. சங்க இயக்குநர் சபை 21 வயது நிரம்பப்பெற்ற 9 அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இயக்குநர் சபை அங்கத்துவ நியமனப் பத்திரங்கள் மேற்படி கூட்டம் நடைபெறவிருக்கும் திகதியிலிருந்து 14 நாட்களுக்கு முன்னர் சங்கத் தலைவருக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்பப்படல் வேண்டும். நியமனங்கள், பிரேரிப்பவர், ஆமோதிப்பவர் ஆகியோரும் கையொப்பமிடப்பட்டு அபேட்சகர் சம்மதம் தெரிவித்தலும் இருத்தல்வேண்டும்.

மு. தம்பிராசா

5972

# கல்வனைஸ்ட் கூரைத் தகடுகள்

6 அடி முதல் 10 அடி வரை வேண்டிய அளவு நீளங்களில்

32 USG, 35 USG

# கல்வனைஸ்ட் உருக்கு பைப்புகள்

1/2 அங். முதல் 6 அங்குலம்வரையான அளவுகளில் தற்பொழுது கையிருப்பிலுண்டு

விற்பனையாளர்களுக்கும் தொகையாக கொள்வனவு செய்வோர்க்கும் விசேட கழிவுண்டு

# கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1 & 11/2, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவிலும் தாளமும்

மாரியம்மன் கோவில் ஏழாம் திருவிழாவில் கச்சேரி வைத்துவிட்டு ... வீட்டிற்கு வந்த கையோடு ஒருபாட்டம் நன்றாகத் தூங்கி முடித்துக் கொண்ட தவில் மேதை வீரமணி எரியும் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டே... கட்டிலைவிட்டு எழும்பவும் அவன் மனைவி கோமதி அறைக்குள் வரவும்... சரியாக இருந்தது. !

"...இண்டைக்கு நீங்க சரியான லேட்...வெந்நீரெல்லாம் வைச்சிட்டன்... எல்லாம் ரெடி வாருங்கோ குளிக்கிறதுக்கு..." இப்படிக் கோமதி அடக்கமாகவும் கலகலப்பாகவும் சொல்லிக் கொண்ட போது... வீரமணியின் அடிமனதிற்குள்ளிருந்து எரிந்து புகைந்து கொண்டிருந்த சொல்லாத எரிச்சலுக்கு ... தவிலைப் போட்டு முழக்கித் தள்ளிவிடுவதுபோல்... தனது மனைவியையும் உரமேறிய தனது கைகளினால் மளாரிமளாரென்று முழக்கித் தள்ளிவிட்டால்... என்ற சாரமாக எண்ணிக் கொண்டவன் "நான் தண்ணீரிலை குளிச்சிறன்... நீ அந்த [illegible] நந்நீரிலை... சிங்காரவேலனைக் குளிக்கவை' என்று சொல்லும் பாவனையில் ...வாசிக்கப்படாத ஒரு தவிலாக ஒரே மௌனமாக நின்று கொண்டிருந்தான்.

"...என்னப்பா... நீங்கள்... நித்திரை விசரிலை ... என்னேடை..." என்று கோமதி இழுக்கத் தொடங்கியதும்... "போதும் கோமதி... கனக்க அலங்காரம் பண்ணாதை" என்று... தாளத்தைத் திடீரென முறித்துக்கொண்ட தவில்காரராகச்...சொல்லிக் கொண்ட வீரமணி..."...எனக்கிப்ப உடம்பு சுகமில்லாத மாதிரிக் கிடக்குது... குளிக்கிற வேலையை ஆறுதலாக வைச்சுக் கொள்ளலாம்..." என்று ஏதோ மனசிசர் பிடித்தவனாக அலட்டித் தள்ளியபடியே... ஏதோ... தவிலில் உள்ள பிழையை வலு அக்கறையாக கண்டுபிடிக்கும் பாவனையில் சும்மா...சாட்டிற்கு தவிலைத் தூக்கிவைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"இந்த மனிசனுக்கு நித்திரை விசர்...", என்று தனக்குள் சிலேப்பேனாக புறுபுறுத்தபடியே கோமதி அப்பால் போய்விட்டதும் தவிலை அந்த இடத்திலேயே அட்பிடியே கொண்டுபோய் வைத்துவிட்ட வீரமணி... ஒரு கொஞ்சநேரத்திற்கு கட்டிலில் இருந்துக் கிடந்தபடியே யோசித்துப் பார்த்தான் தனதுமனதிற்கு அது பத்தியப்படும் என்பதுபோல் பொடிடப்பாவை எடுத்து இரண்டு தரம் உறிஞ்சிவிட்டு கட்டிலில் சாய்கின்றான்...

இராத்திரி நடந்த மாரியம்மன் கோவில் திருவிழாவில் தாளக்காரப்பையன் தாமோதரம் ... அடிக்கடி தாளத்தைப் பிழைக்கவைத்ததையும் தனது சோடித்தவிற்காரரான சிங்காரவேலன் கச்சேரியின் நடுவில் காணாமற் போய் விட்டதையும் ... ஆழமாக யோசித்துப் பார்த்துக் கொண்ட வீரமணி... தனது தொழிலின் மீது கொண்ட ஒரு வித பக்திவெறி காரணமாக ஏதோ பித்துப் பிடித்தவன் மாதிரியாக...திடீரென்று கட்டிலைவிட்டு எழும்புகின்றான்.

"...சீ...இந்த படுமட்டிப் பயல் தாமோதரம்... ராத்திரி தாளமாபோட்டான்...என்ரை தொழிலின்ரை மகத்துவத்தையே...கெடுத்து வைச்ச மாதிரி...தாளம் பிழைச்சா... எப்பிடித் தவிலை வாசிக்கமுடியும்...? அந்தக் கலை... படியே இருக்க... அவன் படுபாவி சிங்காரவேலனும் இடை நடுவில் சம்பிநீட்டிற்றானே...ஞ்சானே" என்றெல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்ட வீரமணி...தனது தொழிலிலிருந்து... ஓடும்பத்திற்கே தாவிப்பாய்ந்து கொண்டவனாக ...சற்று விநாடிகளுக்கு அப்படியே மௌனமாக நின்றுகொண்டிருந்தான்.

"அண்ணே உங்கடை சம்சாரத்திலை நம்ம சிங்காரவேலன் மனடபடுகிறான் போலை தெரியிது அவன்ரை கதைகாரியமெல்லாம் நெருப்பும் பஞ்சும் மாதிரியே... இருக்கண்ணே... எதுக்கும் நீங்க கொஞ்சம்..." இப்படியெல்லாம் இரண்டு மாதங்களுக்கு முன் பின்னுக... ஒரு திருமணவீட்டில் கச்சேரி வைக்கப்போன இடத்தில் தனது செற்றில் நாதஸ்வர வித்துவானாக இருக்கும்மாசிலாமணி கதையோடு கதையாக சொல்லிவைத்ததை ...தவிலில் சொருகியிருந்த தவில் வாசிக்கும் தடியை அவுக்கெடுத்து இழுத்தெடுத்து தவில் வாசிக்கத் தொடங்குவது போல... ...தனது நினைவிலிருந்து சடுதியாக ... இழுத்துக் கொண்டவன்...

"ஒரு குடும்பத்திலே புருஷனும் மனைவியும் ... தவிலும் தாளமும் மாதிரியல்லவா இருக்கவேணும். தாளக்காரன் தாமோதரம் தாளத்தை பிசகவிட்டபின்... அதுதான் பாதகமில்லையே அவனுக்கு தவிலடிக்கிற பொல்லாலை இரண்டு முறைக்கி தலையிலை போட்டுக்கொடுக்க அவனுடைய கை ஒழுங்காகத் தாளத்தைப் போட்டுக் குடுக்கும்...இதென்னடா எண்டா ஒரு குடும்பத்திலை மனைவி எண்ட தாளம் பிசகிப்போனா புருஷனெண்ட தவிலை எப்பிடி ஒழுங்காக தாளலயம் பிசகாமல் அச்சரசுத்தியாக வாசிப்பதைப்போலை... குடும்பத்தை சிரும்சிறப்புமாகக் கொண்டு போகமுடியும்...? அட கடவுளே...?" என்றெல்லாம். ஒரு அமர்க்களமான தவில் கச்சேரியாகிவிடுகின்றான்.

"கோமதியக்கா...! கோமதியக்கா...!!" சத்தம் வந்த பக்கத்தை வீரமணி எட்டிப் பார்க்கின்றான். ஞானும் அவனுக் [illegible] நிச்சயமாக தனது சோடித் [illegible] வின் மனைவி அமராவதிதான் என்று நினைத்துக் கொண்டு எட்டிப்பார்த்தபோது ... அமராவதி அடுப்படிப்பக்கமாகப் போய்க் கொண்டிருந்தாள்.

"...என்னடி அமரா... ராத்திரி நீ திருவிழா பார்த்த கதை சொல்லமாட்டியா...?"

"ஓம் கோமதியக்கா ... நீங்கள் ஒரு சுத்தப்பட்டிக்காடு..."

"ஏன்ரி... நீ...நீ...ஒருபெரிய பட்டினமா..."

நன்றாக ரசித்துக் கொண்ட அமராவதி... "கோமதியக்கா ... நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ ... அவரின்ரை பிடிச் செய்யாட்டோலை... உந்தப்பெரிய வீரமணி அண்ணைக்கு எந்தக்குறையும் வந்திடாது...இன்னும் அவர் எனக்குப் பக்கத்தாக்கும் விட்டுப் பக்கமே வரேலை..." என்று உணர்ச்சி வசப்பட்டுக் கொண்ட அமராவதி...... "கோமதியக்கா... நாலைக்கு பூங்காவனத் திருவிழா...கோயில் கொடி ஏற முன்னமே வீரமணி அண்ணேன்ரை பூங்காவனத் திருவிழாக் கச்சேரிக்கு அச்சாரம் குடுத்துவிட்டாங்களே. பத்து தல ... இன்னொராசா, வேட்டி பழனி செட்டியூர் திமகன்... எல்லாரும் வருவாங்களாம்... நீங்களும் கண்டிப்பாக வரவேணும் எண்டெல்லாம் பெரிய பெருமையாகச் சொல்லிட்டு அமராவதி... வீரமணியின் அறைப் பக்கமாகப் போய்விட்டதும்... அங்கே நடக்கப்போகும் சம்பாஷணையைக் காதுகொடுத்துக் கேட்கத் தைரியமற்றவனாக தனது இருகாதுகளையும் கோமதி இறுக்கமாகப் பொத்திக் கொள்கின்றாள். என்றாலும் அவளுக்கு தன்னுடைய நினைவாசலைத்தான் அடைத்துக்கொள்ள முடியவில்லை. சிங்காரவேலன் ராத்திரி மாரியம்மன் கோவில் திருவிழாக் கச்சேரியின் இடையில்... தலைக்கு உடம்புக்குச் சுகமில்லை என்று சாக்குப்போக்குச் சொல்லிட்டு தன்னுடைய வீட்டுக்கு தவில் வந்து அகோரமாகத் தட்டியதையும் சற்றும் எதிர்பாராத விதமாக விபரீதமாக நடக்க இருந்ததையும் அதை தடுத்த அவளோடு தான் மிகவும் சண்டை நடந்து கொண்ட தையும் அவன் அவமானப்பட்டு வேகமாகப் புறப்பட்டுச் சென்றதையும் நினைத்து முடித்துக்கொண்ட கோமதி... தன்னுடைய நினைவின் வாசலை எப்படியோ அடைத்துவிட்டு காதுகளைப் பொத்தியிருந்த கைகளை... எடுக்கின்றாள்.

"இதில வீரமணி அண்ணை அவரை இனிப் பிழைவிடாத முறையில நான் பார்த்துக்

காரரான சிங்காரவேலன் கச் ...

"இல்லையக்கா ... வீரமணி அண்ணேன்ரை தவில் கச்சேரி என்றா...இந்த ஹோல்சிலே வியிலுமிருந்து அதைப் பார்க்கச் சனம் கடல்கடலாக வரும்... நீங்கள் என்னடா எண்டா... இறுக்கிப் போர்த்து மூடிக் கொண்டு நித்திரை".

"இல்லைடி அமரா... அவற்றை தவில் கச்சேரி எல்லாம் கேட்டுக்கேட்டு எனக்கு மிச்சம் அலுத்துப்போச்சுதடி... போதாததுக்கு...நம்ம சகடிலும் அதை டேப்பிலையைச் சுப்போட்டுப் போட்டுப் பாத்து...காதில கேட்டுக் கேட்டுத் தன்னுதமே...".

"அப்ப நீங்க... இனி பதுசாய்க் கேக்கப்போறீங்களோ.." என்று இரட்டைக் கருத்தப்பட விளையாட்டாகக் கேட்டுக்கொண்ட அமராவதி "ராத்திரி... கோமதியக்கா... ஒரு பெரிய பிரச்சினை நடந்து போச்சுது..." என்றதும்... அதிவேகமாக ஓடிக்கொண்டிருந்த சடுகிண்டி... திடீரென பிரேக் பிடித்தது... பயங்கரமாகக் குலுங்கித் தள்ளிவிடுவதுபோல ...கோமதி ஒருகணம் மனதிற்குள் பயங்கரமாகக் குலுங்கிக்கொண்டாள்.

"எடியேய் அமரா ... நீ... பிரச்சினை ... எண்டதின்ரை மீனிங்...என்னடி?"

"அக்கா...ராத்திரி... திருவிழாவிலை... தாளக்காரப் பையன் தாமோதரம்... தாளத்

தைப் பிசகாப் போட்டு..." என்று சொல்லத் தொடங்கிய போதுதான் "அப்பாடா..." என்று நிம்மதி மூச்சுவிட்டபடியே... "நானும் என்னவோ ஏதோ எண்டு நல்லாய் பயந்து போனன்ரி அமரா..." என்று நிப்பதியாகச் சொல்லிக்கொண்ட கோமதி ... "அதோடை என்ரையவரும் கச்சேரியிலை இடையிலை எங்கேயோ சனியன் பிடிச்சது மாதிரி..." என்று அமராவதி ஆத்திரத்தோடு சொல்லி முடிப்பதற்குள்ளாக கோமதி தன்னையும் மறந்து... ஐயோ கடவுளே ' என்று கத்திவிடுகின்றாள்...

அறைக்குள் இருந்தபடியே இவர்களின் கதைக்குக் காது கொடுத்துக் கொண்டிருந்த வீரமணிக்கு தனது மனைவியின் 'ஐயோ கடவுளே என்ற சத்தம் தனது தவிலுக்கு மேல் சிங்காரவேலன் பெரிய பாருங்கல்லைத் தூக்கித் தொம்மென்று போட்டுவிட்டதைப் போன்று ...மூளை இருதயம் எல்லாம் இடமும் ... தவிலடிப்பதுபோல் நடுங்கத் தொடங்கியது தன்னுடைய கணவர் கட்டிடி இடையில் காணாமற்போய்... வீரமணியின் தொழிலுக்கு ஒரு பெரிய பங்கத்தையே தேடிவிட்டான் என்ற பொல்லாத கவலையினாலும் ஆத்திரத்தினாலும்தான் கோமதி 'ஐயோ கடவுளே...' என்று கத்தினளென்பதை தனக்குள் கோசினுறான் உங்களோடை இருந்த தான் வீரமணியண்ணை அவர் பெரும்புகழும் வைடைய வேணும்..." "...இந்த அமரா... அவன் என்னுடை தொடர்ந்தும் இருக்க வேணும் எண்டு நீ விரும்பிலு... அப்பிடியான குரங்குச் சேட்டை வேலையை நடக்கையல் நீதான் கட்டாயமாகப் பார்த்துக் கொள்ளவேணும்... என்ன...? ஒழுக்கம் கெட்ட பயல்...". கோமதிக்கு... தனது நினைவு வாசல் மறுபடியும் படாரென திறந்துவிடப் போவது போலத் தெரிந்தது. அசரீரீ பலமாக மீண்டு கொடுப்பதுபோல் மறுபடியும் தனது செவிகளின் வாசலை அடைத்துக் கொள்ளுகிறாள் ......களிக்கும் ஆவத்தலோடு ஒன்றிற்கு வெளிக்கிட்ட வீரமணி கோமதியை ஒரு விதமாக முறைத்துப் பார்த்துக் கொண்டே அவளை விலத்திக் கொண்டு போனதும் கோமதிக்கு தன்னுடைய நெஞ்சிற்குள் எண்ணுக்கணக்கான தவில்களை வைத்து இடிமுழக்க ஓசையாக முழக்கித்தள்ளுவதுபோல ஒரே பனக் கலக்கடியாயிருக்க தனித்துக் கொண்டிருக்கும் கணவனை ஏதோ சிக்குப்பட்ட வலைக்குள்ளிருந்து பார்ப்பது போல் பார்த்துக்கொண்டிருந்தாள். "...என்னுடைய உட்பைதின்று எல்லிடமே வித்தையைக்கற்று சிலவேளை

[4ம் பக்கம் பார்க்க]

தைபிட்டி அ. இராசதுரை

## கவிதை இயற்றுவது எப்படி? [5]

# கவி அரங்கைச் சிறப்பிக்கும் எண் சீர் விருத்தம்

இலக்கிய விழாக்களிலும் சமய விழாக்களிலும் வேறு பல சிறப்பு நிகழ்ச்சிகளிலும் இன்று கவி அரங்கம் இடம் பெறுகிறது மக்களும் பெருந்திரளாகக் குழுமி நின்று கவி அரங்கை இரசித்துக் கைதட்டித் தம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.

கவியரங்குகளில் பல வேறுபட்ட பாடல்களும் இடம் பெறுகின்றன. ஆயினும் எண் சீர் விருத்தமே பெருமளவில் கவியரங்கைச் சிறப்பிக்கின்றது.

எண்சீர் விருத்தம் மூவகைச் சீரும் ஈரசைச்சீரும் கலந்து நாலடிகளைக் கொண்டு வரும். வரும் போது முதலாம் அடியில் என்னமுறையில் மூவகைச் சீரும் ஈரசைச் சீரும் அமைந்துள்ளனவோ அதே முறையில் மற்றைய அடிகளும் அமைதல் வேண்டும்.

"ஆடவரின் காதலுக்கும்
பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும்
மாற்றமுண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல்
மனைவி செத்தால்
பெட்டுக் கிழவனும்
காதல் செய்யப்
பெண் கேட்கின்றான்
வாடாத பூப்போன்ற
மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்
பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள்
உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு
பார்த்ததுண்டோ?"

### மூவகைச்சீர்

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் ஈரசைச்சீர் நான்கோடும் நேரசை நிரையசை இரண்டினையும் தனித்தனி சேர்த்தால் மூவகைச்சீர் எட்டாகும்.

அசை - வாய்ப்பாடு
நேர் நேர் நேர் - தேமாங்காய்
நிரை நேர் நேர் - புளிமாங்காய்
நிரை நிரை நேர் - கருவிளங்காய்
நேர் நிரை நேர் - கூவிளங்காய்

இவை நேரீற்று மூவசைச்சீர், காய்ச்சீர் என்றும் வெண்சீர் என்றும் கூறப்படும்.

அசை - வாய்ப்பாடு
நேர் நேர் நிரை - தேமாங்கனி
நிரை நேர் நிரை - புளிமாங்கனி
நிரை நிரை நிரை - கருவிளங்கனி
நேர் நிரை நிரை - கூவிளங்கனி

இவை நான்கும் நிரையீற்று மூவகைச்சீர். இவை கனிச்சீர் எனவும் வழங்கும்.

ஆடவரின் - காதலுக்கும் -
பெண்கள் - கூட்டம்
நேர் நிரை நேர்-நேர்நிரைநேர்
நேர் நேர் - நேர் நேர்
கூவிளங்காய் - கூவிளங்காய்
தேமா - தேமா
அடைகின்ற - காதலுக்கும் -
மாற்ற - முண்டோ
நேர்நிரைநேர் - நேர்நிரைநேர்
நேர் நேர் - நேர் நேர்
கூவிளங்காய் கூவிளங்காய்
தேமா தேமா

### கலிவிருத்தம்

அகவற்பா எழுதத் தெரிந்து கொண்டவர்களுக்குக் கலி விருத்தம் எழுதுவது சுலபமானது. அகவற்பாவுக்கும் கலி விருத்தத்துக்கும் ஓசை வேறுபாடு இருப்பினும் இரண்டும் பெரும்பாலும் ஈரசைச் சீரைக் கொண்டே வருவன.

ஈரசைச் சீர் நான்கு கொண்ட நாலு அடிகளை உடையதாய் வருவது கலி விருத்தம்.

"நம்பி - ஞர்க்கு - நலம்பல -
நல்கிடும்
வெம்பு - லிக்கொடி -
வெல்புகழ்ச் - சோழர்கள்
தம்கு - டிக்கொரு - தாயக -
மாயதெம்
அ பு - லிச்சடை - ஐயர் -
பழம்பதி"

இப்பாட ஈரசைச் சீர் நான்கு கொண்ட நாலு அடிகளை உடையதாய் வந்துள்ளது

அசை, சீர்களை நன்றாகத் தெரிந்து கொண்ட பின்னர் தளை பற்றித் தெரிந்து கொள்ளுவது முடியும் வெண்பா, கட்டளைக் கலித்துறை போன்ற பாடல்களை இயற்றுவதற்குத் தளை பற்றிய தெளிந்த அறிவு வேண்டும்.

அசை சீர்களில் தெளிவு ஏற்படுவதற்குப் பயிற்சிதான் உதவியாகும். பல பாடல்களை எடுத்து அசை, சீர்களை பிரித்துப் பார்ப்பதன் மூலம் கவிதை இயற்றத் தொடங்குபவர் அசை, சீர் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(தொடரும்)

புலவர் ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி (4)

# பாடவிதான அபிவிருத்திக்கு ஒரு நிலையான நிலையம்

கல்வி அமைச்சின் செயலாளர், சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர்கள், பிரதேசப் பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் இதில் அடங்குவர். சேவைக்காலப் பயிற்சி முறைகள் இவர்களினால் தெளிவுபடுத்தப்படவில்லை. எல்லா உயர் அதிகாரிகளும் செயலாளருடன் இணைந்தே செயல் பட்டனர். இவர்களுக்கிடையில் கடமைக்கூறுகள் தெளிவு படுத்தப்படாமையினால் பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கினர். பாடவிதான அதிகாரிகள் பலரும் அமைச்சின் பாதைகளிலும், கவசி அறைகளிலும் நின்று வசதியற்ற சூழ்நிலையில் செயற்பட்டனர். இந்நிலை 1969ல் மாற்றியமைக்கப்பட்டது. இந்த ஆண்டிலேயே பாடவிதான அபிவிருத்தி நிலையம் தனி நிலையமாக, அமைச்சின் கட்டடங்களிருந்தும் பிரிந்து தனிக்கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிலையத்தின் நோக்கங்கள் பின்வருமாறு வகுப்பட்டன;-

1. பாடவிதானம் அமைத்தல்
2. ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியளித்தல்.
3. நூல்கள் எழுதல், தகவல்கள் தயாரித்தல்.
4. மதிப்பீடு செய்தல்.
5. கல்வி சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

மேற்படி வேலைத்திட்டங்களைப் பார்வையிடுதற்காக வெளிநாடுகளிலிருந்து பல்வேறு கல்வி ஆலோசர்கள் வருகின்றனர். அண்மையில் இது ஆசியப் பகுதியில் கல்வி அபிவிருத்திக்கான நிலையமாக (apeid) 5 யுனெஸ்கோவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இதனால் இந்நிலையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக வளர்ந்து வருகின்றது. கற்பித்தற் கலையில் பல்வேறு [illegible]ம் கள் நடத்தப்பட்டன. பெரும்பாலும் ஆலோசர்கள் யாவரும் வெளிநாட்டினராவர். இந்நிலையம் ஐக்கிய ராச்சிய பிரித்தானிய கவுன்சிலின் மூலம் ஆலோசர்களைப் பெற்று வகுப்புக்களை நடத்திவந்தது.

வார இறுதியில் மட்டும் இவ்வகுப்புக்கள் நடந்தமையால் திறமையான முறையில் இவை இயங்கின எனக் கருத முடியாது வார இறுதி வகுப்புக்கள் நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்தன என்றும் கொள்ளமுடியாது. எனவே இந்த முறையில் இன்னும் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய நிலை பற்றி [illegible]ந்த நிலைத்தில் ஆராயப்பட்டது.

### எஸ். பத்மநாதன்
பீ. ஏ. (சிறப்பு) டிப் இன் எட் (இலங்கை)

1969ல் தனித்துவம் பெற்று வளர்ச்சியடைந்த பாடவிதான அபிவிருத்தி நிலையம் ஆரம்பத்தில் விஞ்ஞானம், கணிதம் போன்ற விசேட துறைகளில் மட்டும் கவனம் செலுத்தியது எனலாம். 1971ல் பின்னர் ஏற்பட்ட பெரும் கல்வி மாற்றங்களினால் தனியாக ஒரு பதில் கல்வி மா அதிபதி நியமிக்கப்பட்டார். இவரே இந்நிலையத்திற்கும், சேவைக்காலப் பயிற்சிக்கும் பொறுப்பாக இருந்தார்.

ஆரம்பத்தில் இங்கிருந்து கல்விச் சீர்திருத்தங்கள் யாவும் சுற்று நிருபங்கள் மூலமே பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டு வந்தன, இதனால் சில பாடசாலைகளுக்கு தகவல் கிடைக்க முடியாத நிலையும் ஏற்பட்டது. இதனால்- சேவைக்காலப் பயிற்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புக்கள் பலருக்குக் கிடைக்கவில்லை. கொழும்புப் பகுதி ஆசிரியர்கள் மட்டுமே பெரும்பாலும் இதில் கலந்துகொண்டனர். விஞ்ஞானம் கணிதம் போன்ற பாடங்களை மாற்றுவதற்கு இந்நிலையத்தினால் சில விசேட ஆலோசர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் வார இறுதியில் பாட வகுப்புக்களை நடத்தினர். சில காலங்களில், குறிப்பாக விடுமுறைக் காலங்களில், இத்தகைய வகுப்புக்கள்

மாற்றங்கள் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. பல்வேறு செயல் அமர்வுகள் WorR Shops) மூலம் இதன் தேவைகளை ஈடுசெய்யலாம் எனக் கருதப்பட்டது. இதனால் பல்வேறு பாடவிதானக் குழுக்கள் அமைக்கப்படவேண்டி ஏற்பட்டது. இவர்கள் அனைவரும் இந்நிலையத்தில் ஒரிடப் படுத்தப்பட்டனர். பின்னர், புதியமுறையிலான செயலமர்வுகளும், தொழில் நுட்ப முறைகளும் புகுத்தப்பட்ட நிலையில், பழையபடி விடுதலைக் காலங்களிலும், வார இறுதிகளிலுமே வகுப்புகள் நடைபெற்றுவந்தன. இதனால் இது ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் செயற்படவில்லை.

1971-ம் ஆண்டு பாடவிதான அபிவிருத்தி நிலையத்திற்குப் புதியதொரு அதிகாரம் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது இந்நிலையத்தில் சேவைக்கால ஆசிரியர் பயிற்சிக்கு பொறுப்பாயிருந்த பிரதேச கல்வி மா அதிபருக்கு, கல்வி அமைச்சின் அதிகாரத்திற்கப்பாற்பட்ட ரீதியில், சிறந்த-திறமையான ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும் அதிகாரம் வழங்கப்பட்டது பாடவிதானக் குழுக்கள் கல்விப் பணிப்பாளர்களின் கீழ் கொண்டுவரப்பட்டனர்; கல்விப் பணிப்பாளர்கள், கல்வி மா அதிபருடன் கல்வித்திட்ட மாற்றங்கள் பற்றிக் கலந்தாலோசித்தே செயற்பட்டனர். சேவைக்காலப் பயிற்சி ஒரு பிரதான கல்வி அதிகாரியின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதுசகல பாடவிதானக் குழுக்களுடனும் இணைந்தே இருந்தது. பின்னர் இச் சேவைக்காலப் பயிற்சிப் பிரிவு கல்விப் பிராந்தியங்களுடன் இணைக்கப்பட்டது.

பிரதேச கல்வித்திணைக்களங்கள் கல்விப்பணிப்பாளரின் கீழும், மாவட்டக் கல்விக் காரியாலயங்கள் பிரதான கல்வி அதிகாரிகளின் கீழும் இருக்கின்றன. 17 கல்விப் பிரதேச திணைக்களங்களும், 8 கல்விக் காரியாலயங்களும் இந்நிலையத்துடன் தொடர்பு கொண்டன இப்பிரதேச காரியாலயங்களில் சேவைக்கால ஆலோசகர்கள் நியமனம் பெற்று பயிற்சிகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றனர்.

பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் 1976-ம் ஆண்டு சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தினர் பாட அறிவு, சேவை மூப்பு, திறமை, விசேட தொழிலறிவு என்பவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களின் விபரம் பின்வருமாறு:-

பிரதி கல்வி மா அதிபர் 1.
கல்விப்பணிப்பாளர்கள்- 3.

(9-ம் பக்கம் பார்க்க)

### கல்வி அமைச்சிற்கும் சேவைக்காலக் கல்விப் பிரிவுக்குமிடையேயுள்ள இணைப்புமுறை

கல்வி அமைச்சு
↓
கல்வி அமைச்சின் செயலாளர்/கல்வி மா அதிபர்
↓
- பிரதி கல்வி மா அதிபர் பாடசாலை அமைப்பு.
- பிரதிக் கல்வி மா அதிபர் திட்டமிடல்
- பிரதிக் கல்வி மா அதிபர் பாடவிதான அபிவிருத்தியும் சேவைக் காலப் பயிற்சியும்.

# அரங்கும் அவையும்

### அரங்கத்தில் மேஜர் சுந்தரராஜன்

மேஜர் சுந்தரராஜனின் "கல்தூண்" என்ற நாடகத்தை கண்டுகளிக்க கணிசமான ரசிகர் கூட்டம் திரண்டிருந்தது யாழ் திறந்தவெளியரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு "ஈழத் தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக எந்தத் துறையில் எமது உதவிகள் தேவைப்படுகின்றதோ அவற்றை எல்லாம் பூண திருப்தியுடன் புரியக் காத்துக் கிடக்கின்றோம் நாம்" என நாடக இடைவேளையின் போது சுந்தரராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள் "நல்ல ஒரு நோக்கத்துக்காக, ஈழத்தில் மேடையிட, தமது குழுவைத் தென்னகத்திலிருந்து தேர்ந்தெடுத்தமைக்காக இந்நாட்டு ரசிகர்களுக்கு அன்பர்களுக்கும் கடப்பாடுடையேன்' எனவும் குறிப்பிட்டார்.

பிரச்சினையை அடியொற்றியே நாடக ஓட்டம் அமைந்திருந்தது தந்தையை துச்சமென மதிக்கும் மகனை அடிபணிய வைக்க எடுத்த சபதத்தைச் சுற்றியே நிகழ்வுகள் கோர்க்கப்பட்டிருந்தன. உத்திமுறைகளில் குறிப்பிடத்தக்க புதுமைகளைக் காணமுடியவில்லை. நிரந்தர ரசிகர்களுக்கு "கல்தூண்" திருப்தியை கொடுத்திருக்கலாம்.

### நாதஸ்வர மேதை நா. சோ. உருத்திராபதி

ஆயிரம் ஆயிரம் அரங்குகளில் நாதஸ்வர கானம் பொழிந்து, இசைத்தமிழின் [illegible] தமிழுலகுக்கு அள்ளிச்சொரிந்த மாபெரும் கலைஞன் உருத்திராபதி அவர்களின் இறுதியாத்திரை கலைஞர்கள், இசைக்கலைஞர்கள் சூழ நடந்தேறியது, மாவிட்டபுரத்தில் சென்ற கிழமை

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்புகலூர் ஆதினத்துக்குரிய குடும்ப பரம்பரையில் வந்த இவர் மாவை ஆதீன 'வித்துவானாக' அரை நூற்றாண்டுக்கு மேல் சேவகம் புரிந்தார். சிதம்பரம் உயர் திரு. வைத்தியநாத நாதசுரக்காரரிடமும், சொத்தமங்கலம் உயர்திரு தெண்டாயுதபாணியிடமும் நாதசுரக்கலையைத் துறபோகக் கற்று ஈழத்தில் ஒரு காலகட்டத்தில் தனிக் கொலுவுடன் மிளிர்ந்தவர். தனக்கென ஒரு பாணியைக் கைபாண்டு கீர்த்தன ராகம் வாசிப்பதிலும் இராகங்களை மத்திம சுருதிப்பணி உருப்படி வாசிப்பதிலும் வல்லுநர். இசை ஆசிரியராக மிளிர்ந்த இவரிடம் வாய்ப்பாட்டுப் பயின்றோர் ஏராளம். வயலின் புல்லாங்குழல், வீணை போன்ற பலவேறு வாத்தியங்களையும் கையாள வல்லவர். [illegible] மாவை முருகனுக்கே [illegible] தொனியை அர்ப்பணித்த

இவருக்கு தங்க நாதசுரம் வழங்கி நாற்பது ஆண்டுகளுக்கு முன் கௌரவித்தது மாவை ஆதினம். கொழும்பு, நீர்வேலி போன்ற இடங்களில் கலைப் பெருமக்கள் தங்கப்பதக்கங்கள் சூட்டி கௌரவித்தனர். இராமநாதன் இசைக்கல்லூரிப் பேராசிரியராக இருந்த சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார். இவரது இழப்பு கலையுலகுக்குப் பெருமிழப்பே.

### கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

#### 'கல்தூண்' பற்றிய கருத்தோட்டம்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் மேடையேறிய யாழ். அரங்கக் கல்லூரியின் நாடகங்களை அவைக்காற்றுக்கழக நாடகங்கள் பல பார்த்த கண்ணுக்கு, 'கல் தூண்' பெரும் திருப்தியைத் தரவில்லை. அரங்கமைப்பு நல்லதுதான்; ஆனால் பத்துக்கு மேற்பட்ட காட்சிகளும் இடையிடை திரையிடப்படுவதும் சற்றுக் காலம் கடந்த நாடக நிலையை ஞாபக மூட்டின தந்தை பாத்திரத்தில் வந்த சுந்தரராஜனின் நடிப்பில் இயற்கையும் மிடுக்கும் இழைபோடின இளைய மகனாக நடித்தவரிடம் கவனக்சிதம் இருந்தபோதும் ஏதோ சினிமாப்பாணியும் இடையிடை பளிச்சிட்டது. ஏனைய நடிகர்களிடம் சினிமாவின் சாயல் இருக்கத்தான் செய்தன. ஒரு தனிக் குடும்பப்

#### பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 'பொறுத்தது போதும்'

8-6-80 ஞாயிறு பேராதனை பல்கலைக்கழகத்தில் யாழ். நாடக அரங்கக்கல்லூரியின் "பொறுத்தது போதும்" நாடகம் நடைபெறவிருக்கிறது. இந்நிறுவனத்தின் இவ்வாண்டுத் தயாரிப்பான குழந்தையின் "உருவுகள்' நாடகம் திரும்ப விரசிங்கம் மண்டபத்திலும், காரைநகர், பருத்தித்துறை ஆகிய இடங்களிலும் இம்மாதம் மேடையேற இருக்கிறது. கடந்த 31-5-80 ல் அரியாலையில் நடைபெற்ற நாடகவிழாவில் "பொறுத்தது போதும்' நாடகம் ரசிகர்களின் மத்தியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பார்வையாளர்களிடம் ஏற்பட்ட உணர்வோட்டத்தின் பிரதிபலிப்புகள் [illegible] [illegible] என்பதைச் சுட்டின.

### சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி) களிலே குருவையும் மிஞ்சிய சிஷ்யனாகவிடும் சிங்காரவேலன் பயல் இப்ப என்னை குடும்பத்துக்குள்ளேயும் அந்த வித்தையைக் காட்டி எல்லாத்தையும் சீரழிக்க வந்துவிட்டானே" என்றெல்லாம் யோசித்துக்கொண்ட வீரமணி "இது ஒரு குடும்ப விஷயம், இதுக்காக தொழிலில் வேகமாகக் முன்னேறி வரும் சிங்காரவேலனை என்னுடைய செற்றிலிருந்து தூக்கியெறிவிறதெல்லாம் என்னைப் போலை ஒரு நல்ல கலைஞனுக்கு அது எப்பவும் அழகில்லைத்தான் சே என்னப்பா! எதிர்காலத்திலை ஒரு தவில் மேதையாக வரவேண்டியவன் வீணா இதிலை இறங்கி தன்ரை தொழிலிரைமகத்துவத்தையே கெடுத்து அட யாரப்பா', என்றபடியே இடையில் திடுக்கிட்டுத் திரும்பியபோது அவனுடைய முதுகு ஊத்தையை உரோஞ்சும் ஆயத்தத்தோடு அவனது மனைவி நின்று கொண்டிருந்தாள். "அடசனியனே போய்த் தொலை அங்காலை" என்று சீறிச் சொன்னபடியே பிசகிப்போன தாளத்தைப் பிடுங்கிப் பறித்து அப்பால் வீசி எறிந்து விடுவது போல் வீரமணி கோமதியை ஆவேசமாகத் தள்ளிவிட்டான் தள்ளி விட்டவேகத்தில் பாசி பிடித்த தரையில் போய் விழுந்து விட்ட கோமதி எழும்பிய வேகத்தில் கால் இடறி வழுக்கி சேறும் சகதியுமான வாளைப் பாத்திக்குள் அப்படியே தோய்ந்து எடுத்தாளைக்காக போய்விடுகிறாள். அதே சமயம் சிங்காரவேலன் கோமதியின் நினைவு வாசலின் கதவை மெல்ல நீக்கி எட்டிப் பார்க்கின்றான் நிமிடங்களின் பின்னர் நன்றாக குளித்துத் தோய்ந்து சலவை செய்த சேலைகட்டி ஒரு புதிய உலகமாக வீரமணியின் முன்னால் போய் அமைதியாக நின்று கொண்ட கோமதி எதை எதையோ எல்லாம் தெய்வத்தின் காலடியில் போடும் பன்னீர்ப்பூ மலர்களாக மனம் விட்டு மனமுருகி ஒளிவு மறைவின்றிச் சொல்லிக் கொண்டதும் பூங்காவனத்திருவிழாக் கச்சேரியில் தாளக்காரப் பையன் தாமோதரம் தாளத்தை ஒழுங்காகப் போட்டுக் கொடுக்க அதற்குத்தக்கதாகத் தாளலயம் பிசகாடல் தான் தவிக் கச்சேரி வைப்பது போல் வீரமணி நினைத்து முடிக்கிறான்

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புற்றீசல்கள் போல் 'ரியூட்டரி'கள் தோன்றுவதற்குக்காரணமென்ன?

**'பாடசாலைகளில் உன்னதமான கல்வியைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை மாணவர் மனங்களில் ஏற்படுத்தினுல் ரியூட்டரிகள் ஒழிந்துவிடும்.'**

த. நாகேஸ்வரன்

திக்கெட்டும் ரியூட்டரிகள்- திசைகெங்கும் போதனைகள்- வழியற்றோர் வகையற்ருேர் அனைவருமே ரியூஷனென்பார்- நமது நாடே இன்று ரியூஷன் கல்விமுறையால் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றது. ரியூட்டரிகள் மூடப்படவேண்டும்- ரியூஷன் கல்விமுறை அழிக்கப்படவேண்டும் என்று ஒ சாராரும்-ரியூஷன் கல்விமுறை தொடரவேண்டுமென மறு சாராரும் வாதாடி நேரத்தை வீணுக்கும் நிலைமை உருவாகின்றது.

ரியூஷன் கல்விமுறையின் வளர்ச்சிக்குப் பாடசாலை ஆசிரியர்களின் கடமையுணர்வற்றதன்மையும்- அக்கறையற்றபோக்குந்தான் காரணம் என்று ஆசிரியர்களுக்கெதிராகப் பலர் போர்க்கொடி உயர்த்துகிருர்கள். குற்றம் சுமத்துவதும்- குறைகண்டு பிடிப்பதும் மிகஎளிது ஆனல் ஒவ்வொருவரும் அந்தந்த இடத்தில் இருக்கும்போது தான் பிரச்னைகள் விளங்கும்- இடர்கள் புரியும்-ஒரு சாதாரண ஆசிரியன் என்றமுறையிலே ரியூஷன் கல்விமுறையின் வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் ஆசிரியர்கள் காரணகர்த்தாக்கள் அல்லர் என்ற வாதத்தை நான் முன்வைக்கிறேன்.

## நன்றி இன்றி தூற்றுவதா

ஒரு சில ஆசிரியர்களைக் காரணங்காட்டி-ஆசிரிய சமுதாயத்தின் அப்பழுக்கற்ற பணியின் மீது சேற்றை வாரி வீசும் கயமைத்தனத்தை இனியும் நாம் அனுமதிக்க முடியாது. தமது பாடநேரங்களைவிட மேலதிகமாக லீவு நாட்களிலும் தமது சேவையை மாணவ சமுதாயத்தின் எழுச்சிக்காக-எதுவித லாபமும் கருதாது ஆற்றி வரும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களைக் கருத்தில்கொள்ளாது-நன்றிமறந்து அவர்களை தூற்றுவதும்- குற்றக்கூண்டில் நிறுத்துவதும் விவேகிகளின் செயல்களல்ல.

காலைக் கதிரவன் கண் விழிக்குமுன் எழுந்து ரியூட்டரிகளை நோக்கிச் செல்லும் மாணவர்கள் பின் இரவுதான் வீடு திரும்புகிருர்கள். வேளைக்குச் சாப்பாடின்றி, ஓய்வின்றி -ஆக்கமின்றி ரியூஷ

என்று ஓடிக் காணும் பயன் தான் என்ன? பெற்ருேர்கள் சிந்திக்கவேண்டும். ஏனெனில் ஒரு மாணவனின் கல்வி வளர்வதற்கும் தேய்வதற்கும் பெற்ருேரும் காரணமாக அமைகிருர்கள். அயல் வீட்டுப் பிள்ளை ரியூஷனுக்குப் போனல்-தானும் மேலான தொரு ரியூட்டரிக்குத் தனது பிள்ளையை அனுப்பாவிடில் சில பெற்ருேருக்குத் தூக்கமே வராது. வேகமாக பெருகும் கஜப் நோயைப்போல ரியூஷன்ஞர்கள் கல்விமுறை பரவுவதே றுக்கமுடியாது தவிர வேறு அடிப்படை நோக்கில் சங்கள் எதவும் இருப்பதாகப் தெரியவில்லை

களுக்கு விரட்டியடிக்கும் பெற்ருேர் தமது பிள்ளைகள் அங்கே செபயும் "திருகுதாளங்களை யும்" சற்றுக் கண்காணிப் பார்களாஞல் உண்மையைப் புரிந்துகொள்வார்கள்.

### மாணவர் கவனமின்மை

இரண்டாவதாக ரியூட்டரிகளின் வளர்ச்சிக்கு மாணவர் களுப காரணமாக இருக்கின்ருர்கள் என்பதை எவரும் பாடசாலை பாட நேரங்களில் போதிய கவனமோ அக்கறையோ இல்லாது - ரியூஷ

அறிமுகப் படுத்தப்பட்டு விட்டன.

குறிப்பாக க. பொ. த (சா. த) மாணவர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் பழைய பாடத்திட்டம் இடைக்காலத்திட்டம் - புதிய திட்டம் என மூன்று நிலைகளில் வைத்துக் கணிக்கப்படுகிருர்கள் அதே போலத்தான் க பொ. த (உ. த) மாணவர்களின் நிலையும். இத்தகைய திடீர் மாற்றங்கள் மாணவர்களுக்கு மட்டுமல்ல - ஆசிரியர்களுக்கும் மலைப்பையும், திகைப்பையும் ஏற்படுத்திவைக்கின்றன. இத்தகைய மாறிமாறித் திணிக்கப்படும் கல்வி முறைகளை புரிந்து கொள்ள முடியாமல் மாணவர்கள் எங்கெங்கோ ரியூட்டரிகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறுர்கள்.

மேலும் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையும் மாணவர்கள் ரியூட்டரிகளை நாடக் காரணமாக அமைந்துள்ளது சிறப்பாக கணித - விஞ்ஞான - ஆங்கில ஆசிரியர்களுக்கு பெரும்பகுதிப் பாடசாலைகளில் தட்டுப்பாடு நிலவுகின்றது ஒரு சில ஆசிரியர்கள் இருந்தாலும் அவர்கள் சகல வகுப்புக்களையும் கொண்டு நடத்த முடியாதவர்களாக இருக்கிருர்கள் எனவே திறமைமிக்க பயிற்றப் பட்ட ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு அரசாங்கம் உடனடியாக நியமிக்க வேண்டும் பாடசாலைகளில் தாம் உன்னதமான கல்வியைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை அரசாங்கம் மாணவர் மனங்களில் ஏற்படுத்த வேண்டும். அதை விடுத்து வாய் பேச்சுகளாலும் - கண்டன எழுத்துக்களாலும் "ரியூசன்" கல்வியை ஒழித்துவிட முடியாது.

### ஆசிரிய பணி

ஆசிரியப் பணி - ஒரு புனிதமான பணி - உயர்வான பணி - எதிர்காலச் சமுதாயத்தைக் கட்டி எழுப்புகின்ற அதி உன்னதமான பணி திறமையும் - தகுதியும் மிக்கவர்கள் தான் அப்பதவியை அலங்கரிக்க வேண்டும் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். ஆனல் அத்தகைய புனிதமான பதவி ஏலத்தில் விற்கப்படுவதை நான் சுட்டிக் காட்டியே ஆகவேண்டும். உயர்மட்ட அமைச்சர்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். ஆனல் சாதாரண மாணவர்கள் இதை பூரணமாக புரிந்து வைத்திருக்கிறர்கள். 5 சிறீ - 6 சிறீ - 7 சிறீ என ஆசிரியர்களைப் பார்த்துக் கேலி செய்யும் அளவுக்கு மாணவர்களை ஆக்கி வைத்திருப்பது வேதனைக்குரிய செயலாகும். இத்தகைய ஆசிரியர்கள் சிலரை வைத்துக் கொண்டு சகல ஆசிரியர்கள் மீதும் பெற்ருேரும் மாணவரும் நம்பிக்கையை இழந்து கொண்டு வருகின்ருர்கள் இத்தகைய சீர்கேடுள்ள பாடசாலைகளில்படிப்பதைவிட பொறுக்கி யெடுத்த திறமையான ஆசிரியர்களைக் கொண்ட ரியூட்டரிகளில் படிப்பது மேலானது என்ற அபிப்பிராயம் சமுதாயத்தில் துளிர்த்துக் கொண்டிருக்கிறது. இது எங்கு போய் முடியப் போகிறதோ தெரியவில்லை.

ஆகவே ரியூட்டரிகளை ஒழிக்க வேண்டும் - ரியூசன் முறையை அழிக்க வேண்டும் என்று வெற்றுக் கோஷங்களை எழுப்புவதை விடுத்து ரியூசன் முறைக்கு அடிப்படையாக அமைந்துவிட்ட காரணிகளைத் தேடிப்பிடித்து - அவற்றை நீக்கி மாணவ சமுதாயத்தின் முன்னேற்றத்தைப் பெருக்க பெற்ருேர்களும் - ஆசிரியர்களும் - அரசாங்கமும் சேர்ந்து நடவடிக்கை எடுப்பார்களாக.

### பட்டண பகட்டு

அதைவிடப் பெரிய ஆச்சரியம் என்னவென்ருல் உள்ளூர் ரியூட்டரிகள் கூட இப்போது சில பெற்ருேர்களுக்குக் கசப்பாக மாறிவிட்டன. பட்டணத்து ரியூட்டரிகளை நோக்கித் தமது பிள்ளைகளை வலுக்கட்டாயமாக அனுப்பிவைக்கும் அரும்பெரும் வைபவத்தை பல பெற்ருேர் இப்போது செய்கிருர்கள். தனது மகன் பாடசாலையில் படிக்கிருன் என்று சொல்வதைவிட - பட்டணத்து ரியூட்டரியில் நூற்றம்பது ரூபாய் கட்டிப் படிக்கிருன் என்று மற்றவர்களுக்குப் பெருமையாகச் சொல்வதில் சிலர் பெருமைப்படுகிருர்கள் இத்தகைய மனநிலையைப் பெற்ருேர் மாற்றியமைத்து-தமது பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பவேண்டும் கல்லூரிகளில் நடத்தப்படும் பாட விரிவுரைகளை தம் பிள்ளைகள் மீட்டுப் பார்ப்பதற்கு வீட்டில் கவனமெடுக்கவேண்டும். அதை விடுத்து வெறும் பகட்டுக்காகவும்- பெருமைக்காகவும் பிள்ளைகளை ரியூட்டரி

னில் செல்லித்தராததையா ஆசிரியர் சொல்லித்தரப் போகின்ருர் என்ற நினைப்பில் பாடசாலையை ஓர் ஓய்வு நேரத் தங்குமடமாக எண்ணுகிருர்கள் பல மாணவர்கள் இத்தகைய மனப்போக்கு இருக்கும் வரை பாடசாலைகளில் மாணவர்கள் முன்னேற்றம் காண்பதென்பது முயற் கொம்பே! ஆகவே பாடசாலைகளில் மாணவர்கள் ஊக்கத்துடனும் — நம்பிக்கையுடனும் கல்வி கற்கும் மனப்பக்குவத்தைப் பெறுவார்களானல் தனியார் கல்வி நிறுவனங்கள் தாமாகவே மூடிக்கொள்ளும்.

### யாரை நோவது?

உயர்தர மாணவர்கள் தான் ஏதோ சில பல காரணங்களால் — ஆசிரியர்களின் ஊக்கமின்மையால் — பிரத்தியேகக் கல்வியைப் பெறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்படுகிருர்கள் என்பதை வாதத்துக்காக ஏற்றுக் கொள்ளலாம் ஆனல் இன்று முதல் முதலாம் வகுப்பு மாணவர்கள் முதற்கொண்டு ரியூஷன் மோகங்கொண்டு அலைகிருர்களே! இதற்கு யாரை நோவது? யார் மீது பழி போடுவது? திக்குத் தெரியாமல் — திசையும் தெரியாமல் — செம்மறியாட்டுக் கூட்டம் போல — ஒருவருக்குப் பின் ஒருவராக ரியூட்டரிகளை நோக்கி ஓடுகின்ற நிலைமைக்கு முடிவு எப்போது? இதை பெற்ருேர்கள் தான் சிந்திக்க வேண்டும்.

நமது நாட்டைப் பொறுத்த மட்டில் ரியூட்டரிகளின் "அசுரவேக" வளர்ச்சிக்கு மாறிமாறிப் பதவிக்கு வரும் அரசாங்கங்களும் காரணமாக அமைகின்றன என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். அரசியல் வேறு கல்வி வேறு அரசாங்கங்கள் மாறலாம், ஆட்சிசெய்யும் கட்சிகள் மாறலாம் — ஆனல் கல்வித் திட்டங்கள் படிமுறையாக வளர்ச்சி பெற வேண்டும் கல்வித்துறையை அரசியற் பகடைக்காயாக மாற்றி மாறிமாறிக் காயை நகர்த்தி விளையாட முயன்ருல் முடிவு மோசமாகத் தான் இருக்கும் இன்றைய நிலையில் இரண்டு மூன்று இரண்டு மூன்று கல்வி முறைகள்

## ஞாலம் பெரும் கவிஞன்

கூவுகுயில் கூவுவதும் என்பாட்டு
குருவியினம் முழுவதற்கும் நான் கவிஞன்
மேவு முகில் முழக்கமது என்வெடிப்பு
மெல்லியர்தம் வாயசைப்பில் என் கவிதை!

பாயும் நதிச் சலசலப்பு என்கவிதை
பால் கறக்கும் செம்பினிலும் என்பாட்டு
ஓய்தலின்றி முழக்கமிடும் பெருங்கடலின்
ஓசையது என்மனத்தின் வெஞ்சினப்பு

வானகத்தில் பறக்குமந்த வானம்பாடி
வாயசைப்பு யார்வரிகள் கேட்டுப்பாரும்
கானகத்தில் சில கணங்கள் வந்து பாரும்
கணக்கற்ருேர் பாடுவதும் என்பாட்டே

கோலவண்டு இசைப்பதுவும் என் கவிதை
கொடும் புலிவாய் ஓசையது என் குமுறல்
ஞாலமது முழுவதற்கும் நான்கவிஞன்
நாற்றிசையும் புகழ்பரப்பும் பெருங்கவிஞன்.

-- வடகோவை வரதராஜன்

# ராகு-கேது மாற்றம்

## உங்களுக்கு எப்படி?

சோதிடர் ஆ. சிவராசா (பி. ஏ. பி. ஐ.)

நவக்கிரகங்களுள் வியாழன், சனி, ராகு, கேதுக்களின் சந்திர லக்கின கோசர மாற்ற பலாபலன்கள் மனித நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிப்படையச் செய்கின்றன. 17-5-1980 தொடக்கம் 1½ வருட காலத்திற்கு சிம்ம ராசியில் இருந்த ராகு கடக ராசிக்கும்; கும்பத்தில் இருந்த கேது மகரத்திற்கும் மாறிச் செல்வதினல் ஒவ்வொரு ராசிக் காரரும் எத்தகைய பலனை அனுபவிக்கப் போகின்ருர்கள் என்பதை நோக்குமிடத்து ராகு கேது மாற்றத்துடன் இக்காலம் முழுவதும் செல்வாக்கினைப் பிரதிபலிக்கும் சனி, வியாழ கிரக மாற்றப் பலாபலன்களையும் ஒப்பிட்டே நோக்க வேண்டும்.

### மேடம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1ம் கால்)

மேட ராசிக்காரருக்கு ராகு 4 ல் வருவது நல்ல பலனை அளிக்காது போனலும் கேது 10 ல் சஞ்சரிப்பதும் வக்கிர சனி 12-8-80 தொடக்கம் 6 ம் இடத்துக்கு வருவதும் 29-8-79 தொடக்கம் 19-9-80 வரை வியாழன் 5ல் இருப்பதும் மிகமிக நன்மையளிப்பதும் பின்னர் வியாழன் 19-9-80 தொடக்கம் ஒரு வருடத்திற்கு 6 ல் வருவது உகந்ததல்லாவிடினும், பொதுப் பலன் நன்றேயாகும்.

### இடபம்

(கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)

உங்களுக்கு 3 ல் ராகு சிறிது கஷ்டங்களையும் 29-8-79 தொடக்கம் 19-9-80 வரை 4-ம் இட வியாழன் அலைச்சலைக் கொடுப்பினும் கேது 9 ல் வருவதும் வக்கிர சனி 12-8-80 தொடக்கம் 5 ல் சஞ்சரிப்பதும் 19-9-80 தொடக்கம் ஒரு வருடத்திற்கு வியாழன் 5-ம் இடத்தில் உலவுவதும் வாழ்க்கையில் வளமான எதிர்காலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் எல்லாத்துறைகளிலும் சிறந்த மாற்றத்தை எதிர்பார்க்க முடியும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ம் கால்)

ராகு 2 ல் சஞ்சரிப்பது சிறப்பாகும் ஆனல் 8-ம்இடக் கேது நன்றல்ல. இதேபோல சனி, வியாழ மாற்றங்கள் கூட உங்களுக்கு எதிர்பார்த்த நற்பலனைக் கொடுக்காதபடியினல் கேது, வியாழ, சனிக் கிரகங்களுக்கு பிரீதி செய்வது மிக மிக அவசியம். ராகு நல்ல இடத்துக்கு வருவதே நொந்த உள்ளத்திற்கு ஆறுதலளிப்பதாகும்.

### கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

[9-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கவிஞர் வாகரைவாணனின்

# 'தமிழ்ப்பாவை'

ஈழத்துப் பத்திரிகையுலகில்... கவதைச் சரமாய் நறுமணம் பரப்பி... இலக்கிய நெஞ்சங்களில் புகுந்து நிற்கும்- "சுதந்திரைப் பாவை" ஈழ நாட்டில் வெளிவந்தது, எனும் நீள் கவிதை இலக்கியச் சுவைஞர்கள் நினைவில் இன்னமும் நீந்திக் கொண்டுதானிருக்குமென நம்புகின்றேன். அக்கவிதைச் சுவட்டின் தொடராய்... "தமிழ்ப் பாவை" என மகுடம் சூட்டப்பட்டு 24 பக்கங்களில் ராஜநடை போடும் கவிஞர் வாகரைவாணனின் மற்றுமோர் இனிய கவிதைத் தொகுதிதான் இந்த "தமிழ்ப் பாவை" யெனும் நீள் கவிதை.

கற்பனையும் பகுத்தறிவையும் ஒன்று சேர்த்து இன்பத்தையும் உண்மையையும் காட்டுவதே கவிதையாகும். கவிதை என்றதுமே இயல்பாய் இதயத்தில் ஒரு இனிமை இழைய ஆரம்பித்து விடும். ஒரு விடயத்தை கவிதையாய் பார்க்கும் போது... அனுபவிக்கும் இதமே தனிதான். அதே இதத்தின் எதிர்பார்ப்போடு... "தமிழ்ப்பாவை" மீது பார்வை ஊர்ந்ததும் மனம் நிஜமான நிறைவில் நீந்தவே செய்கிறது.

தமிழ்ப்பாவை தரும் கவிதைகள் தமிழின வரலாறு சொல்லும் ஒரு உன்னதப் படைப்பு மட்டுமல்ல... கவிஞர், சொற்களை ஆட்சிப்படுத்தி எழுதியிருக்கிற தன்மையும், இனிமை கொஞ்ச வைத்த அழகும்... யாவரும் புரிந்து கொள்ளும் விதமாய் படைத்துள்ள பாணியையும் பாராட்டியே ஆக வேண்டும். கவிஞரின் இயல்பான இந்த கவிதா சக்திக்குத் தான் முதல் சபாஷ்!

கவிதையின் ஆரம்ப அழகையே பாருங்கள்!

> தேவனவன் பெற்றெடுத்த
> தென்மதுரைப் பாண்டி-
> யனோ
> ஆவலுடன் வளர்த்த மகள்
> அழகு தமிழ்ப் பெண்-
> பாவாய்!
> ஏவலரில் ஒருவன் நான்
> என் கையால் உனைத்-
> தூக்கி...
> ஆவதை திரும் வரை
> அணைத்திருக்க வேண்டு-
> மம்மா!

என்ன இனிமையான சொற்பிணைப்புகள்! மீண்டும் மீண்டும் இந்தக் கவியடிகள் மீது பார்வையைப் பதிய வைக்க வேண்டும் போல் இல்லையா? ஒரு கவிஞனின் தமிழ் ஆர்வத்தை - இதயத்துடிப்பை இதைவிட அருமையாக வெளிப்படுத்த முடியுமா? என்ன?

கவிதையின் ஆரம்பத்தில் சழவேந்தன் அவர்கள் சொல்லியுள்ள ஒரு வார்த்தை நினைப் பிடித்துக்கொண்டு நிற்கிறது. "கவிஞரின் கவிதையில் இடம் பெற்றுள்ள சொற்கள் அவர் தேடிச் சென்ற சொற்களாகவன்றி அவரை நாடி வந்த சொற்களாகவே விளங்குகின்றன" என்று. ஆம்! சில கவிதைகளைப் பார்க்கும் போது... அந்த உண்மை பட்டென ஒளி சிந்துகின்றது. அதைக் கோடு போட...-'இதோ!

> தென் பொதிகைச் சாரலிலே
> தென்றலவள் கூட வர
> கன் பொதியும் எழிற்-
> செல்வம்
> கனிந்து நீ நடந்தாயாம்
> மண் பொதியும் வைகையிலே
> மலரோடு புனலாடி
> பொன் பொதியும்
> உடலோடு
> புகார் நோக்கி எழுந்தா-
> யாம்!

கவிஞரின் இந்த சொல்லழகைப் பார்த்து... பொங்கும் உவகையோடு மனதிற்குள் சபாஷ் போட்டுக் கொள்கிறேன்!

இன்னமும் ஒரு கவிதையில்- வஞ்சிப் பெண்ணின் உள் அழகை வர்ணிக்கிறார் பாருங்கள்...! அம்மாடியோவ்! இன்னும் கொஞ்சம் இறங்கி வந்து அடுத்த கவிதையில் சொல்கிறார்... -

> அங்கங்கே வானம் மீது
> அப்பிய நீலம் போல
> துங்கவே வளர்ந்த குன்றப்
> தூரிகை இழுத்தாற் போல
> பொங்கவே அருவி விழும்
> புலவர்கள் இதனைக்-
> காணில்
> கவிதையைத் தலையில்-
> வைத்துக்
> கட்டிய சிவனே என்பார்!

இங்கே வார்த்தையின் வர்ணிப்பு பின்னி வரும் சுவையைப் பாருங்கள். மனதில் தங்கி நிற்கும் வண்ணம் வர்ணனை தந்த கவிஞருக்கு இங்கே அடுத்த சபாஷ் போட வேண்டும். தொடர்ந்தும் இதே தமிழ்ப் பெண்ணை வரவேற்கும் ஆர்ப்பாட்டம் சிலிர்ப்பான ஒரு சுவையைத் தருகின்றது.

இப்படி... கவிதை நிறைய அனுபவித்த எத்தனையோ சுவையை எடுத்துச் சொல்லலாம். மென்மையான செல்வ நடையில் கவிதைகளை நகர்த்திக் கொண்டு வந்து... படித்த எங்கள் மனதில் நிறுத்தி வைத்த கவிஞரின் திறமைக்கு எத்தனை சபாஷ் போடுவது!

"தாழ்ந்த தமிழகம்..." கவிதையில் மாலிக்கபூர் என்பவனின் கையில் புகுந்து தமிழ்ப் பாவை பட்ட பாட்டை தயரத்தின் சுமையோடு சொல்லிக் கொண்டு வருகின்றார் கவிஞர். ஆனாலும்... அப்படியே கவிதையை விட்டுவிடவில்லை. வெள்ளையரின் ஆட்சிக் காலத்தில் விடுதலை வேட்கை..., தணியாமல் பொங்கியது என்பதை!

"கொள்ளியாய் எரிந்த காலம்" என்ற சின்ன வார்த்தை மூலம் எவ்வளவு ஆழமாக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார் என்று பாருங்கள். அத்துடன் நின்றுவிடாமல் கோழைகளையும் துள்ளியெழ வைத்து வீரர்கள் ஆக்குகிறாரே...! அருமை தான்!

தமிழ்ப் பாவையின் இறுதிக் கவிதையை இனி நோக்குவோமே! மனதிற்குள் நின்று அசைத்த உணர்ச்சிப் புயலில் என்னமாய் குமுறுகின்றார் என்று பாருங்கள்! இந்த இடத்தில் கவிஞரின் ஆரம்ப வார்த்தைகள் சட்டென ஞாபகத்திற்கு ஓடி வருகின்றது "தமிழைத் தாயாக வணங்குபவன் நான்" - அந்த வழிபாட்டின் உலுக்குதல் தான் இந்த வார்த்தைகளின் வடிவங்களோ?

சந்தேகமென்ன...! அடிகளையே பார்ப்போமே...! -

> அன்னியர் பிடியில் மீண்டும்
> அடிமையாய்ப் போனாய் -
> என்று
> கண்மணி! நாங்கள் சேர்ந்து
> கதறினோம்! முடிவாய்
> ஒன்று
> எண்ணினோம்! யுத்தம் -
> செய்து
> எந்திரு உன்னைக் கொள்ள
> பண்ணினோம் சபதம்
> ...தன்
> பாரதம் நடத்துகின்றோம்!

"கண்மணி!" என்று அழைக்கின்ற அந்த உருக்கமான ஒரு சொல் போதுமே கவிஞரின் தமிழ் மோகத்தை, துடிப்பை எடுத்துக்காட்ட ஆக ஒரு நிமிஷம் தான் கவிஞர் குமுறுகின்றார். அடுத்த கவிதையிலேயே... நீரில் பனைதத் தோய்த்து எடுத்த மாதிரி தணிந்து போய்... -

"தருக நீ பாவாய் உந்தன்...!" என்று ஆரம்பித்து "ஓடோடி வருவாய் தாயே!" என்று இதமாக நிறைவு செய்கின்றார். அது எங்கள் மனதிலும் ஒரு நம்பிக்கையான நிறைவையே தருகின்றது திருப்தியோடு பாராட்டை வழங்குகின்றோம்.

இத்தனை சிறப்பிற்கு மத்தியிலும் ஆங்காங்கே சின்னத் தயக்கம் மாதிரி... கவிதைகளில் தொய்வு நிழல் விரிக்கிறதே! என்ன சங்கதி? அந்த இடங்களில் எல்லாம் கவிஞர் திகைத்துப் போய் நின்று விட்டாரா? அல்லது மெல்லிய தூக்கம் போட்டுவிட்டாரா? ஆனாலும்... இது ஒரு பெரிய குறையாகத் தென்படவில்லை. ஏனென்றால்... கவிஞர் தன் சொல் பிரவசமூலம் உச்சியில் நிற்கிறாரே! பாராட்ட வேண்டிய வார்த்தை உதிர்ப்புகள் அதனால்... "தமிழ்ப் பாவை" இனிமையையும் நிறைவையுமே தருகின்றன.

ஆகவே - கொஞ்சு மொழியில்... நளின நடையில் கவிஞர் உருவகித்துத் தந்திருக்கும் அழகு தமிழ்ப் பாவை இலக்கியப் பிரியர்கள் மனதிலும் இதமாக நடை போடுவாள் என்று தயங்காமல் கூறலாம்.

**- தமிழ்ப்பிரியா -**

# நிர்ப்பந்தங்கள்

## குறுநாவல்

## கோகிலா மகேந்திரன்

### அத்தியாயம் [4]

அன்று... பல்கலைக் கழகத்திற்குக் காலடி வைத்த முதல் நாள்... மனதில் பயப் பிராந்தியுடன் "சரசவி உயன" ஸ்டேசனில் இறங்கும் போதே சீனியர் மாணவர்கள் பலர் வந்து மஞ்சுவையும் அவளுடன் கூட வந்த மாணவிகளையும் சூழ்ந்து கொண்டார்கள். "மிஸ்... நில்லுங்கோ... நில்லுங்கோ... உங்கடை பேர் சொல்லாமை ஓடுறீங்க..." என்று கூவியபடியே தாடியும் மீசையும் வளர்த்த முகத்துடனும் பருமனான கருநிற உடலுடனும் காணப்பட்ட ஒரு மாணவன் மஞ்சுவையும் பாரதியையும் வளைத்துக் கொண்டான். சுற்றுமுற்றிலும் விழித்து விழித்துப் பார்த்தாள் மஞ்சு. அறிந்த முகங்களோ, தெரிந்த உருவங்களோ, யாரும் தென்படவில்லை. அவனோ தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டான்.

"என்ன மிஸ் விழிக்கிறீங்க பல்கலைக் கழகப் பழக்க வழக்கம் ஒன்றும் தெரியாது போலை இருக்கு... இங்கே சீனியரைக் கண்டால் யூனியர்ஸ் "குட் மோர்னிங் சேர்" என்று சொல்லி சல்யூட் அடிக்க வேணும். அதுதான் மனர்ஸ்... தெரியுமா?" என்று கேட்டு அவன் உறுக்கும் போது "தெரியாது" என்று மஞ்சுவும் பாரதியும் முணு முணுக்கிறார்கள்.

"தெரியாட்டா இனிமேல் பழக வேணும்... நல்... ரூ இற்" என்று வெருட்ட இவர்களும் அதேபோல் குட்மோனிங் சொல்லிக் கைகளை உயர்த்தி மடித்து நெற்றியில் பிடித்துத் தலையைத் தாழ்த்திச் சல்யூட் அடிக்கிறார்கள். இதைப் பார்த்து ஏதோ பெரிய ஹாஸ்யம் நடந்தது போல் அவனது கூட்டாளிகள் எல்லாம் பலமாகக் கைதட்டிச் சிரிக்க அந்த உற்சாகத்தில் அவன் தொடர்ந்து கேட்கிறான்.

"மிஸ்! எந்த ஸ்கூலிலை இருந்து வாறீங்க?"

"இண்டு கொலிஜ்"

"கொலிஜ்? நோ, இற் இஸ் ஏ காற்றின் செட... அது ஒரு கால்நடைபட்டி நவ் றிப்பீற்... இண்டு காற்றின் செட்..."

"இண்டு காற்றின் செட்" என்று இவர்கள் சொல்ல, "சோ... யூ ஆர் காற்றின். நீங்களும் ஆடு மாடுகள் தானே" என்று அவன் சொல்ல மறுபடியும் பெரிய சிரிப்பொலி

இந்த நேரத்தில் தான் தூரத்தில் பாலு வருவதை பாரதி அவதானிக்கிறாள். பாலு அவள் கல்லூரியில் அவளது வகுப்பில் படித்தவர். ஒரு வருடம் முன்னதாகப் பல்கலைக் கழகத்திற்கு வந்துவிட்டாலும் தன்னை அறிந்தவர் ஒருவரைக் கண்டு விட்ட ஆறுதல் பாரதி மஞ்சுவிடம் திரும்பி "அதோ பாலு வருகிறார்" என்று முணு முணுத்தது கூட அந்தக் குண்டுக் கறுப்பனுக்குக் கேட்டு விட்டது.

"யாரது பாலு உம்முடைய மச்சானா? ஒரு சீனியர் ஸ்ருடன்ரைப் பற்றிச் சொல்லேக்கை... "மை ஒனரபிள் சீனியர் மிஸ்டர் பாலேந்திரன்" எண்டு சொல்ல வேணும்... தெரியுமா? என்று மிரட்டுகிறான்.

வேகமாக வந்த பாலு அந்தக் குண்டுக் கறுப்பனின் காதில் ஏதோ இரகசியமாய்ச் சொல்ல அவனும் தலையாட்டுகிறான்.

"சூட்கேசைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடவுங்கோ..." என்று பாலுவும் விறைப்பாகவே சொல்கிறார் ஸ்டேசனிலிருந்து கண் மறை தூரம் வந்த பிறகுதான் பாலு கதைத்தார்.

"யூ நோ! இவங்கள் பிடிச்சால் உங்களை இலேசில் விட மாட்டாங்காகள். அதுதான் நான் ஒரு பொய் சொல்லி உங்களைச் சட்டிக் கொண்டு வந்தனான்..."

உள்ளங்களிடையே விந்தையாய்த் தோன்றிய பாலுவைப் பற்றி பாரதிக்குத் தெரிந்தவற்றைக் கேட்டறிந்து கொண்டாள் மஞ்சு. அவர் ஒரு தொழிலாளியின் மகனாம். அவருடைய அப்பா யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தனியார் கள்ளுடித் தொழிற்சாலையில் நாட் கூலியாக வேலை செய்கிறாராம். வீட்டிலே மிகவும் கஷ்டமாம் பாரதி சொன்னபோது உள்ளத்தின் உள்ளே முள் ஒன்று சுறுக்கென்று குத்தியது போலிருந்தது மஞ்சுவுக்கு யாழ்ப்பாணத்தில் தனியார் கள்ளுடித்தொழிற்சாலை... ஒருவேளை ......

கடந்த காலம் என்ற நினைவுகளுக்கிடையில் மூழ்கிச் சுகம் கண்டுகொண்டிருந்த மஞ்சுவை எழுப்பியது கீழே இருந்து ஒலித்த குரல்.

"ரூம் நம்பர் 150. விசிட்டர்ஸ்!..."

பாலுதான் வந்திருக்க வேண்டும் என்ற நினைவில் பாரதியையும் அழைத்துக் கொண்டு விரைவாகச் செல்கிறாள். பெஸ்ற் புளோரிலிருந்து கீழே இறங்கும் படிகளில் தன்னை அறியாமலே துள்ளித் துள்ளி இறங்குகிறாள் போல இருக்கிறது.

"பாலு வந்திருக்கிறார் எண்ட உடனை, கவலை எல்லாம் பறந்துபோச்சு...!" என்று பின்னால் வரும் பாரதி கேலிசெய்யும்போதுதான்.

"ஓ...நோ...விசிட்டர்ஸை என்டிலே பண்ணுவான்..." என்று ஏதோ சமாதானஞ் சொல்லித் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளப்பார்க்கிறாள் மஞ்சு.

விசிட்டர்ஸ் ஹாலில் வட்டமாக அடுக்கப்பட்டிருந்த கதிரைகளில் மூவருமாக அமர்ந்து கொள்கிறார்கள்.

"லாஸ்ட் இயர் நான் எழுதின ரியூற்றோறியல்ஸ் கொண்டு வந்திருக்கிறன். படிச்சிட்டு ஆறுதலாகத் தாங்கோ?" என்று எங்கோ ஒரு கோணத்தில் கதையைத் தொடங்குகிறார் பாலு. மஞ்சு அவர் தந்த அந்த பயிலை பெற்றுக்கொண்டு பிரித்துப் பார்க்கும்போது, "மஞ்சு மதியானம் சாப்பிட்டவா?" என்று பாரதியைப் பார்த்து அவர் கேட்பது... "ஒரு தாயிடம் மட்டுமே இருக்கக்கூடிய கனிவும் அன்பும் ஆதரவும் இவரிடம் எப்படி அடைக்கலம் புகுந்தன" என்ற வியப்பை மஞ்சுவிடம் ஏற்படுத்துகிறது. அன்னை இறந்து அருந்துயரில் அமிழ்ந்து போய்க்கிடந்த நாட்களிலாவது ஒரு நாள்... ஒரு நேரம்... 'மஞ்சு சாப்பிட்டியா?' என்று அப்பா கேட்டிருந்தால்...அவர் கேட்கமாட்டார் அவருக்குக் கவலைகள் பெரிதல்ல. காசுதான் பெரிது...

"சாப்பிட்டல... வேண்டாம் எண்டு சொல்லிவிட்டால்... நான் விட்டிடுவனோ?" என்று பாரதி கேட்கிறாள்.

"நோ...ஐமீன்... வீட்டிலை ஏதோ நடக்கக்கூடாத ஒரு பெரிய நிகழ்ச்சி நடந்து எல்லாமே போயிட்டது போலை ஒரு விரக்தியும் வேதனையும் இந்த நேரத்திலை வரத்தான் பார்க்கும் பட்...அன்புக்குரிய ஒரு உயிர் போயிட்டாலும்... இன்னும் பல உயிர்கள் இருக்கிறம்... அவைகளிட்டை அன்பு காட்டுறதுக்காக, அவையளின்ரை அன்பைப் பெற்று மகிழுறதுக்காக... இன்னும்

"அவனிட்டை இரகசிமாய் என்ன சொன்னனீங்கள்?",

"இவை இரண்டு பேரும் என்ரை கொலிஜிலை இருந்து வருகினம். ஸ்கூலிலையே கொஞ்சம் திமிர் பிடிச்ச கேள்ஸ், இவைகளைச் சரியான முறையில் றகிங் பண்ணவேணும் எண்டு நான் வெகுநாளாகத் திட்டம் போட்டிருக்கிறன். இவை பற்றி என்னட்டை விட்டிட்டு மச்சான்..." எண்டு சொன்னன். நான் சொன்னது உண்மை எண்டு நம்பி விட்டிட்டான்..."

"அப்ப... எங்கடை திமிரை அடக்க என்ன செய்யப் போறியள்?" என்று குறும்பாகக் கேட்கிறாள் பாரதி.

"ஒண்டு இரண்டிலை... திறையத்திட்டங்கள் இருக்கு இப்ப சொல்ல ஏலாது காலம் வரும்போது சொல்லலாம்..." என்று சொல்லிக் கொண்டே அவர்களைக் ஹாலுக்குப் பக்கத்தில் உள்ள சயன்ஸ் பக்கிரி கன்ரீனுக்கு அழைத்துச் சென்று "மில்க் டொபி" வாங்கித் தருகிறார்.

"இப்போதைக்கு சீனியர் ஆகிய இந்த மில்க் இரண்டு பேரும் குடிக்க முடிக்க வேணும்" என்று கூறி இரண்டு போத்தல் ஸ்ரெறிலைஸ்ட் மில்க் ஓடர் கொடுக்கிறார்.

அன்று மாத்திரமல்ல தொடர்ந்தும் இரண்டு வாரம் நடைபெறும் றகிங்கிலிருந்து பெண்களைத் தம் அவைப்பதற்கு எத்தனையோ யுத்திகளைக் கையாண்டார் பாலு.

துளசிச் செடிகளின் மணம் ...வைதான். அதனுள்... ஆயிரம் ஆயிரமாய பற்றை பற்றையாய்ப் படர்ந்து கிடக்கும் துளசிச் செடிகளுக்கு நடுவில் ஒரே ஒரு ரோஜா மலர்ந்திருந்தால்... அந்த ரோஜா வால் ஈர்க்கப்படுவது தவிர்க்கவியலாதிருப்பது போல... ஒரே மாதிரி ஆயிரக் கணக்கில் குவிந்து கிடந்த மாணவ

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிகள்

வரதர்

## தேர்தலும் ஜனநாயகமும்

இலங்கைத் தமிழர்களின் கவனத்தை மிகவும் கவர்ந்த தமிழகச் சட்டமன்றத் தேர்தல் முடிவு யாருமே எதிர்பாராத விதமாக வந்திருக்கிறது! - இந்தத் தேர்தல் வந்துவிட்டால் ஜனநாயகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடிவதில்லை. தேர்தல்கள்தான் ஜனநாயகத்தின் உயிர்நாடி. இத்தேர்தல்களே ஜனநாயகத்தின் ஓட்டைகளையும் உடைத்துக் காட்டுகின்றன.

இந்தியத் தேர்தல்களைப் பற்றிக் கேட்கிறோம்; படிக்கிறோம். எங்கள் நாட்டுத் தேர்தல்களைக் கண்ணால் கண்டு அனுபவிக்கிறோம்.

ஒரு நிமிஷம் சிந்தித்துப் பார்ப்போமானால், இந்தத் தேர்தல்கள் தமது கடமையைச் சரிவரச் செய்வதில்லை என்ற உண்மையை உணருவது கஷ்டமில்லை.

ஜனநாயகக் கோட்பாட்டின் படி நாட்டை ஆளுதற்குத் தகுதியான தலைவர்களைத் தெரிவு செய்வதற்காகவே தேர்தல்கள் நடைபெற வேண்டும். - இந்தத் தேர்தல்கள் தகுதியானவர்களை மட்டும்தானா தெரிவு செய்கின்றன?

வேட்பாளர் எப்படிப்பட்டவராயிருந்தாலும், - பரந்துபட்ட நாட்டுக்கு அவர் நன்மை செய்வாரா? நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமலிருப்பாரா என்பவைகளைப் பற்றி எதுவும் சிந்தியாமலே - அவர் எனக்கு வேண்டியவராக இருந்தால் நான் அவருக்கு வாக்களிக்கிறேன். உங்களுக்கு வேண்டியவருக்கு நீங்கள் வாக்களிக்கிறீர்கள் - இப்படித் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிக்கு வருபவர்கள் என்ன செய்கிறார்கள்? அடுத்த தேர்தலில் தமக்கு வாக்களிக்கக்கூடியவர்களுக்காக எதையாவது செய்து கொண்டிருக்கிறார்கள்,

இதுதான் இன்றைய ஜனநாயகத்தின் நீதி! - இந்த ஜனநாயகத்தைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போடவேண்டுமென்று நன்றாகத் தெரிகிறது. ஆனால், அதற்குப் பதிலாக எந்த நாயகத்தைக் கொண்டு வருவது என்பது தான் வெளிச்சமாகவில்லை!

## மத்தியஸ்தம்!

ஒரு "இருநூறு யார் ஓட்டப் போட்டி'. பல பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டு வந்த வீரர்களுக்கிடையிலான கடைசிப் போட்டி.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய எல்லாப் பகுதிகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்டு வந்த வீரர்கள் அணிவகுத்து ஓடுவதற்கு ஆயத்தமாக நிற்கிறார்கள்.

திடீரென மத்தியஸ்தர் சொல்கிறார், "யாழ்ப்பாணத்திலிருந்து வந்த வீரரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் 25 யார் முன்னுக்கு வந்து நில்லுங்கள்" என்று.

ஓட்டம் ஆரம்பிக்கும்போதே யாழ்ப்பாணத்து வீரர் 25 யார் பின் தள்ளப் பட்டுவிட்டார். அப்படியிருந்தும் தான் எடுத்துக் கொண்ட கஷ்டமான, ஒழுங்கான பயிற்சிகளின் காரணமாக, போட்டியில் இரண்டாவதாக வந்து சேர்கிறார் ஆனாலும் மத்தியஸ்தர் அவருடைய உயரம், உடலமைப்பு - இப்படி ஏதோ காரணங்களைக் காட்டி அவருக்கு நாலாவது ஸ்தானத்தையே அளிக்கின்றார்.

இப்படி எங்கே நடந்தது என்று ஆத்திரப்படுகிறீர்களா? மாணவர்களின் பல்கலைக் கழகப் பிரவேசப் போட்டியில் இதுதானே நடந்துகொண்டிருக்கிறது!

## அப்புவின் பிள்ளை

பாராளுமன்றத் தேர்தல்கள் வரும் போதுதான் இலங்கைத் தமிழ் மக்களிடையே அரசியல் உணர்வும் கிளர்ந்தெழும். என்ன காரணம்? தேர்தல் காலத்தில் மட்டும் தான் அரசியல் வாதிகள் மக்களிடையே அரசியல் வேகத்தை எப்படியோ உண்டாக்கிவிடுகிறார்கள். தேர்தலும் முடிய, எல்லாரும் ஓய்ந்துபோய்விடுவார்கள். தேர்தலில் தோற்றுப் போனவர், அடுத்த தேர்தல் வரும் வரை விலாசம் இல்லாமலே இருந்துவிடுவார். இரண்டொருவர் மட்டுமே இதற்கு விதிவிலக்கு. இந்த இரண்டொருவரில் ஒருவரே குமார் பொன்னம்பலம்.

'அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்தான்' என்று சொல்வார்களே, குமாரைப் பொறுத்தவரை அது நூறு வீத உண்மை. வேறு யாரேனுமாயிருந்தால், சென்ற தேர்தல் தோல்வியோடு பேசாமல் தானும் தன் தொழிலுமென்று ஒதுங்கியிருவார்கள்.

குமார் ஓயவேயில்லை!

ஒழுங்காகத் திட்டமிட்டு, மிகுந்த திறமையுடன் பெரிய புயலை எதிர்த்து தலை தூக்கி நிற்கிறார்!

ஒரு நல்ல அரசியல்வாதிக்குரிய தகுதிகள் அவரிடம் நிறையவே இருக்கின்றன

அனைத்துத் தமிழர்களையும் சேர்ந்த ஒரு இயக்கம் முழு மூச்சோடு இயங்கவேண்டுமானால் குமார் பொன்னம்பலமும் அதற்குள் இருக்கத்தான் வேண்டும்!

# எம்.ஜி. ஆரின் வாக்குறுதிகள் நடைமுறை சாத்தியமா?

தமிழ்நாட்டுச் செங்கோட்டையின் சாவி மீளவும் ஐக்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திடம் தமிழக மக்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் லோக்சபைத் தேர்தல்களிலும் பாண்டிச்சேரி சட்டமன்ற தேர்தலிலும் எழுந்த தி. மு. க- இந்திரா காங்கிரஸ் பேரலை சட்டசபைத் தேர்தலில் எங்கோ ஓடி விட்டது பேரலையில் அமிழ்ந்து கொண்டிருந்த இரட்டை இலை வெற்றி இலையாக பவனி வருகிறது. கலைக்கப்பட்ட சட்டசபையில் 126 தொகுதிகளைக் கொண்டிருந்த அண்ணா தி. மு. க. 129 தொகுதிகளாக ஆதரவுப் பெருக்கத்துடனும் தனது தோழமைக் கட்சிகளின் 33 ஆசனப் பலத்துடனும் தமிழகத்தில் நிலையான ஆட்சி அமைக்கப் புறப்பட்டுள்ளது. இந்த உறுதியான அரசின் பலம் பொருந்திய எதிரணியாக தி மு க - இந்திரா காங்கிரஸ் அணி அமரப் போகிறது.

இந்த எதிரணி உறுப்பினர் பலத்தில் அண்ணா தி. மு க வுடன் மோதமுடியாது என்று உண்மையே ஆனால் ஏனைய மாநிலங்களில் எல்லாம் அமோக வெற்றி நாட்டி தமிழ் நாட்டில் மட்டும் எதிரணியாக நிற்கும் இந்திரா காங்கிரஸின் மத்திய அரசின் வலிமை தமிழகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது விடாது. அதேவேளை இந்திய லோக்சபையில் தி. மு. க வின் 16 உறுப்பினருடன் சேர்ந்தே இந்திரா காங்கிரஸுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உள்ளது. எனவே தி. மு. க- இந்திரா காங்கிரஸ் உறவு தொடர்கதை போல தொடர வேண்டிய நிலையில் உள்ளது. ஒருமித்த ஓட்டு உறுமீன் வருமளவும் பார்த்திருக்கும் கொக்கின் நிலையில் இந்திரா காங்கிரஸ் காத்திருக்கும்.

இந்நேரத்தில் தி. மு. க வின் மதியூகமும் அரசியல் அனுபவமும் அண்ணா தி. மு. க வை வீழ்த்தக் குறிபார்க்கும் துவக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழகத்தில் ஏற்பட்ட திடீர் அரசியல் மாற்றத்தின் காரணங்கள் பல. முக்கியமானவை சில வடவர் ஆதிக்கம் திராவிடர் இடைத்தூலக்க திராவிட இயக்கமே பாதை வகுக்கலாமா? இருபத்தேழு ஆசனங்களுடன் சட்ட சபை மூலையில் குந்தி இருந்த இந்திராகாங்கிரஸ்க்கு 110 தொகுதிகளை ஒதுக்கி



தமிழ்நாட்டில் வடவர் செல்வாக்கு வளரவழி செய்யலாமா? எனும் கேள்வி அண்ணாவால் தமிழ் உணர்வு மாநில உணர்வு ஊட்டப்பட்ட தமிழக கிராமமெல்லாம் எம். ஜி. ஆரால் எழுப்பப்பட்டது. அதேவேளை தமிழகத்திற்கு விஜயம் செய்த இந்திரா "மாநில அரசுகளுக்கு இப்போதுள்ள அதிகாரங்களே போதுமானது" என்று கூற மாநில சுயாட்சியின் வடிவான கருணாநிதி வாளாவிருக்கவேண்டிய நிலை.

இது ஒருபுறமிருக்க ஒரே மேடையிலேயே தி. மு. க- இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் கருத்துமோதல்களை ஏற்படுத்தித்தாமே தமது கூட்டைப் பலவீனப்படுத்தினர் அன்பில் தர்மலிங்கம் நிதி அமைச்சரா? இளையபெருமாள் நிதி அமைச்சரா என மந்திரி அமைப்பு மோதல்கள் கூடக் காணப்பட்டன. இம்மேடை மோதல் மக்கள் மத்தியில் கூட்டணியால் நிலையான ஆட்சி அமைக்க முடியுமா? எனும் சந்தேகத்தைத் தூண்டிவிட்டது.

## விலைவாசி ஏற்றம்

எம். ஜி. ஆர். ஆட்சி கலைக்கப்பட்டு கவர்னர் ஆட்சிநடைபெற்ற சில மாதங்களுக்கிடையில் 3 ரூபா 60 சதமாக இருந்த ஒரு கிலோ அரிசி 4 ரூபா 80 சதமாகவும், 4 ரூபா 50 சதமாக இருந்த ஒரு கிலோ சீனி 6 ரூபாவாகவும், 7 ரூபாவாக

## பற்றிமாகரன்

இருந்த நல்லெண்ணெய் 16 ரூபாவாகவும் கிடுகிடுவென உயர்ந்தன. இவ்விலைவாசி அதிகரிப்பு ஏழைகள் மேல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

எம். ஜி. ஆர். 'நான் அறிவற்றவனாக இருக்கலாம், என் கட்சி கடும் புலி ஆட்சியாக இருக்கலாம். ஆனால் என் காலத்திலா அல்லது என் ஆட்சி கலைக்கப்பட்ட பின்பா விலைவாசி ஏறியது? எனக் கேட்டார். இதன் எதிரொலியே தேர்தல் வெற்றி.

## கருணாநிதி தப்பினார்

'சோவின்'பாஷையில் கூறப்போனால் கருணாநிதி தப்பிவிட்டார். காரணம் கூட்டணி ஆட்சிபீடமேறி அதன்பின் ஏற்பட்டிருக்கும் சகல வீழ்ச்சிகளுக்கும் கருணாநிதியே பொறுப்பாக மாறியிருப்பார். இதனால் கருணாநிதியின் அரசியல் எதிர்காலமே நாசமாவதற்கு உரியநிலை இருந்தது. தேர்தல்கள் வரலாம், தோல்விகள் வரலாம், வெற்றிகள் வரலாம் ஆனால் கருணாநிதியின் தலைக்கு வந்த ஆபத்திலிருந்து தப்பி ட்டார்

லோகசபைத் தேர்தலின் போது இந்திரா — தி. மு. கழகக் கூட்டணிக்கு ஆதரவு அளித்த மக்கள் சட்ட சபைத் தேர்தலில் மாத்திரம் ஏன் ஆதரவை மாற்றிக் கொண்



டார்கள் என்பதற்கு திரு. கருணாநிதியே கூறியுள்ள கருத்துப் பொருத்தமாய் இருக்கலாம் வேலையற்றோருக்கு இலவசமாக ஒரு கிலோ அரிசி, அல்லது ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்ப் பணம் தருவதாக அ. தி. மு. க மக்களுக்கு உறுதியளித்துள்ளது. இந்த வாக்குறுதியை நம்பி, மக்கள் ஓட்டளித்திருக்கிறார்கள். மக்களுக்கு அளித்துள்ள இந்த வாக்குறுதியை அ. தி. மு. க. அரசு நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கருணாநிதி கூறியிருக்கிறார்.

அ. தி. மு க. அரசு இதை எப்படிச் சாதிக்கப்போகிறது என்பதை காத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## நிர்ப்பந்தங்கள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கனகாலம் உற்சாகமாக வாழத்தான் வேண்டி இருக்கு. எண்ட நினைவு மனதைவிட்டு அகலாமல் நீங்கள்தான் பாத்துக்கொள்ளவேணும்..." தனக்குச் சொல்ல விரும்பிய ஆறுதல் வார்த்தைகளை நேரே சொல்லச் சங்கடப்பட்டுப் பாரதியிடம் "இண்டிரக்ட்" ஆகச் சொல்கிறார் என்பதும் புரிந்துகொண்டு மௌனமாக உட்கார்ந்திருக்கிறாள் மஞ்சு. பாரதி ஏதோ பதில் சொல்ல வாய் எடுப்பதற்குள் உள்ளே இருந்து வந்த விஜி பாரதியைக் கூப்பிடுகிறாள்.

'பாரதி...எக்ஸ்கியூஸ் மி போர் டிஸ்ரேபிங்... நான் காலையில கேட்ட நோட்ஸ் தர ஏலுமா?'

"இருங்கோ...எடுத்துக் கொடுத்திட்டு வாறன்' என்று சொல்லி விஜியைக் கூட்டிக் கொண்டு முதல் மாடியில் உள்ள தங்கள் அறைக்குப் போகிறாள் பாரதி.

"எனக்குங்கூட இண்டைக்கு மனநிலை அவ்வளவு சரியா இல்லை. உங்களைக் கட்டாயம் பார்த்து ஒரு ஆறுதலுக்கா வது கதைக்கவேணும் எண்ட படியா வந்தனான்...குறிஞ்சிக் குமரன் கோயில் பக்கம் போயிட்டுவந்தா அமைதியாக இருக்கும் எண்டு யோசிக்கிறேன்... சோ...மே... ஐ...கோ...' என்று பாலு எழுந்துகொள்ள முயற்சிக்கும்போது, அவசரமாகக் குறுக்கிடுகிறாள் மஞ்சு.

'வெயிட்...என்ன அவசரம்? ...மனநிலை சரியில்லாமல் போகும்படியா என்ன நடந்தது? எங்களுக்குச் சொல்லலாமா?..."

திடீரென்று பாலுவின் முகத்தில் ஆழ்ந்த சிந்தனைக் கோடுகள் தோன்றுகின்றன. கதிரையின் பின் புறத்தில் நன்றாகச்சாய்ந்து தன்னை நிலைப் படுத்திக்கொள்கிறார். கண்கள் இமை வெட்டாமல் ஒரு மூலையின் புள்ளியில் நிலைகுத்தி நிற்கின்றன. எப்படிச் [illegible] தெரியவில்லை.

(தொடரும்)

## வாசகர் எண்ணம்

25-5-80 ஈழநாடு வார மலரில் வெளியான செல்வி குகா கந்தையாவின் சிறுகதையின் நடை, கொண்டு செல்லும் பாணி நன்றாக இருந்தது. ஆனாலும் பெண்களின் பொன் மேல் ஆசையைச் சாடப் புகுந்து புரட்சிகரமான கருத்தை முன்வைத்த கதாசிரியை இறுதியில் அதை மூடி மழுங்கடித்தது ஒரு மாதிரியாக இருக்கிறது. தொடர்ந்தும் புரட்சிகரமான கருத்தை முன்வைத்து புரட்சிகரமான முடிவை ஏற்படுத்தும் சிறுகதைகளை கதாசிரியையிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

வடகோவை

வரதராஜன்

பிராம்பத்தை,
வடகோட்பாய்

## வாராதோ?

அன்னையவள் தாலாட்டில்
அகமகிழ்ந்து தொட்டிலிலே
துன்பங்களோ ஏதுமின்றி
தூங்கிநான் களித்த
நன்னாட்கள் பொன்னாட்கள்
நல விருப்புடன் அன்னாட்கள்
இன்னொருகால் வாராதோ?
இப்பதிலை தாராதோ?

●

இன்னல்கள் பலவு முற்று
என்னையிங்கு ஈன்றெடுத்த
அன்னையவள் அன்பால்
அணைத்து அகமகிழ்ந்து
இன்னிசை பாடி என்னை
இதமாகத் தூங்க வைத்த
நன்னாட்கள் மீண்டுமென்னை
நாடித்தான் வாராதோ?

●

மழலை மொழி பேசி மனம்
மகிழ்ந்தே விளையாடி
அழகான தமிழதனில்
ஆனந்தப் பண் பாடிப்
பழகிப் பழகி நிதம்
பரவசத்தில் ஆடி
இளமையில் நான் களித்திட்ட
இனிய நாள் வாராதோ?

●

கள்ளங் கபடமின்றிக்
கவலைகளோ ஏதுமின்றி
வெள்ளையுள் ளத்தவனால்
விரும்பிவரும் அனைவருக்கும்
கொள்ளை கொள்ளையாய்
இன்பம்
கொடுத்து மகிழ்ந்து சிறு
பிள்ளையாய் நான் வாழ்ந்த
நன்னாட்கள் வாராதோ?

கீழ்கரவை கி. குலசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலவன் பாடசாலைகளால் பெண்களின் கல்வி பாதிக்கிறது!

**கலவன் பாடசாலையில் கற்பதால் பெண்களின் வாழ்வு பாழடைகின்றது என்கிறார் கரைநகர் இந்துக் கல்லூரி மாணவி செல்வி. சு. தனலட்சுமி. அவரது கருத்துக்கள் இதோ:-**

தற்காலத்தில் பெண்கள் கலவன் பாடசாலைகளில் படிப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. இந்துக்களின் கலாச்சார முறைப்படி நடக்கும் பெண்கள் கலவன் பாடசாலைகளில் படிப்பதால் சில கட்டுப்பாடுகளை மீறி நடக்கவும் வழி வருகின்றது. ஆண்களும் இதே நிலைமையிலேயே செயற்படுகின்றனர்.

தற்காலத்தில் மாணவர்களிடம் கண்ணியம், கட்டுப்பாடு, கீழ்ப்படியும் தன்மை என்பன மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலைமையில் பெண்களும் ஆண்களும் கலந்து படிப்பதால் பெண்களே பெரும்பாலும் பாதிப்புறுகின்றனர். கலவன் பாடசாலைகளிலேயே ராக்கிங்கும் அதிகரித்துள்ளது. ராக்கிங் என்ற பெயரால் மறைமுகமாக பெண்கள் தாக்கப்படுகிறார்கள், அவமானப் படுத்தப்படுகின்றார்கள். இதனை பெண்கள் மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது தவிக்கின்றனர். இதனால் பெண்களின் எதிர்கால வாழ்க்கையே சீரழிக்கப்படுகின்றது. இத்தகைய தொல்லைகளைப் பொறுக்க முடியாத பெண்கள் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திவிடுகின்றனர். கிட்ட உள்ள பாடசாலைகளாக இருந்தாலும் பெண்கள் அங்கு கல்வி கற்க முடியாத நிலை ஏற்படுகின்றது.

**கலவன் பாடசாலைகளில் கல்வி கற்பதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றதா? என்ற கேள்விக்கு மாணவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டோம். கலவன் பாடசாலைகளிலேயே கல்வி கற்கும் நான்கு மாணவர்கள் தமது கருத்துக்களை இங்கே தருகிறார்கள்.**

இரு பாலாருக்கிடையேயும் போட்டி மனப்பான்மை ஏற்பட்டு அதுவே கல்வியில் ஆர்வத்தைக் கூட்டுகின்றது. சிலரோ ஆசிரியர்கள் பாட சம்பந்தமான கேள்விகளை கேட்கும்போது எதிர் பாலார் மத்தியில் சரியான விடை கூறி நன்மதிப்பைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக கல்வியில் கவனம் செலுத்துகிறார்கள். பாடவேலைகளையும் ஒழுங்காக செய்து வருகிறார்கள்.

இரு பாலாரும் ஒன்றாகப் பழகுவதினால் அங்கு சகோதரத்துவம் நிலவுகின்றது. எட்ட இருக்கும் பொருளுக்குத்தான் விதன் ஆசைபடுவான். அதுவே கிட்ட வந்துவிட்டால் கசந்துவிடும். எனவே அங்கு மாணவர்கள் தமக்கிடையே ஏற்படும் பாட சம்பந்தமான சந்தேகங்களை ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கல்வி கற்கின்றார்கள்.

இன்றைய மாணவர்கள் பெரும்பாலான தமது பொழுது தனியார் கல்வி நிலையங்களிலே செலவிடுகின்றனர். அங்கு ஆண்களுக்கு வேறு, பெண்களுக்கு வேறு என்று கல்வி நிலையங்கள் இல்லை. இரு பாலாருக்கும் பொதுவாகவே இயங்குகின்றது. எனவே எல்லோரும் ஒன்றாகவே இருந்து படிக்கின்றார்கள். கலவன் பாடசாலையில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு பாடசாலைக்கும் தனியார் கல்வி நிலையத்துக்கும் இடையே எந்தவித வேறுபாடும் கூச்ச சுபாவமும் தோன்றாததால் அவர்கள் கல்வியில் சந்தேகங்களைக் கேட்டு முன்னேறுகிறார்கள். மற்றைய மாணவர்கள் அங்கு ஒரு புதிய சூழ்நிலையை காணுகிறார்கள். எனவே சந்தேகங்களை எதிர்பாலார் மத்தியில் கேட்பதற்குக் கூச்சப்படுகிறார்கள்; எனது கருத்தின்படி கலவன் பாடசாலையில் கற்கும் மாணவ மாணவிகளின் கல்வி பாதிக்கப்படுவதில்லை.

●

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மாணவன் செல்வன் விநாயகமூர்த்தி இளங்குமார் எழுதியுள்ள கருத்து;-

இன்று நமது நாட்டிலே எத்தனையோ கலவன் பாடசாலைகள் உள்ளன. கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் ஒரு மாணவன், கல்வி கற்று உயர்ந்தவனாக வரவேண்டுமென்று மனதில் குறிக்கோளை வைத்துக் கொண்டு, தனது மனதை வேறிடம் செல்ல விடாது கல்வியிலே கவனம் செலுத்தி வந்தால் நிச்சயமாக இவனது கல்வி பாதிக்கப்படமாட்டாது. ஆனால், இன்னொரு மாணவன் தனது படிப்பிலே கவனம் செலுத்தாது, வேறு திசையில் தனது கவனத்தை வைத்திருந்தால் இவனது கல்வி பாதிக்கப்படும்.

கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன், படித்துப் பட்டம் பெறவேண்டுமென்று குறிக்கோள் வைத்துப் படித்தாலும் இவனோடு கல்விகற்கும் மற்றைய மாணவர்கள் இவனைக் கேலி பண்ணி, இவனது மனதை தவறான பாதைக்கு திசை திருப்பி விடுகிறார்கள். இதுதான் இன்றைய காலத்தில் நடப்பவை. இன்றைய காலத்தைப் பொறுத்தவரை கலவன் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவரின் கல்வி நிச்சயமாகப் பாதிக்கப்படும். ஆண்களை ஆண்கள் பாடசாலையிலும், பெண்களை பெண்கள் பாடசாலையிலும் கற்க விட்டால் எதுவித பாதிப்பு மேற்படாது.

●

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவன் செல்வன் வ. ஜெகதானந்தனின் கருத்து:-

நாளைய உலகின் தலைவர்களை உருவாக்குவது பாடசாலைகளே. அந்நாளைய உலகின் தலைவர்களான இன்றைய மாணவ சமுதாயம் தனது வித்தியாவரத்தைப் போடும் இடம் பாடசாலையாகும். அப்பாடசாலையின் தரமே மாணவர்களின் தரத்தை நிர்ணயிக்கின்றது. ஆகவே மாணவர்களின் தரத்தை நிர்ணயிக்கும் பாடசாலை, எப்படி இருப்பதனால் மாணவனின் தரம் உயரும் என்பதனை நாம் ஆராய்தல் நன்றேயாகும்.

இவ்வகையில் ஓர் பாடசாலை கலவன் பாடசாலையாக இருப்பதனால் ஏற்படும் நன்மை, தீமைகளை எடுத்து ஆராய்தல் ஒரு சிறந்த விடயமாகும்.

ஆண் பெண் கலவன் பாடசாலையில் படிப்பதனால் ஓர் உயர்ந்த சமூகத்தில் தாங்கள் எவ்வாறு நடமாடவேண்டும் என்பனை மாணவர்களுக்குப் புகட்டுவதற்கு கலவன் பாடசாலை நல்லதோர் இடமாகும். மேலும் கலவன் பாடசாலையில் படிப்பதனால் "ஆணும் பெண்ணும் சரிநிகர்" என்ற தத்துவத்திற்கேற்ப அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வசதி ஏற்படுகிறது. மற்றும் ஆண்கள் பெண்களுடன் எவ்வாறு பழகவேண்டுமென்பதையும் பெண்கள் ஆண்களுடன் எவ்வாறு பழகவேண்டும் என்பதையும் அறிந்துகொள்ள வசதி ஏற்படுகிறது. தற்போதைய உலகின் நாகரீக போக்குகளை ஒருவரை ஒருவர் {illegible}

# மாணவர் விவாத அரங்கு

பொதுவான சில விடயங்களில் பெண்களை பங்குபற்ற விடாது தடுப்பது மட்டுமன்றி, அவர்களைக் கேலிக்குரியவர்களாக்குவது இந்தக் கலவன் பாடசாலைகளே. கலவன் பாடசாலை மாணவர்களிடையே சில குறிப்பிடக்கூடிய மிகப் பாரதூரமான குற்றச் செயல்களையும் ஏற்படுத்துகின்றது. சில பெண்கள் செய்யும் தவறான செயல்களை வைத்துக்கொண்டு வகுப்பில் உள்ள பெண்கள் எல்லோரையும் மாணவர்கள் அவமானப்படுத்துகின்றனர். எனவே அனேகமான கலவன் பாடசாலைகளில் படிக்கும் பெண்களின் கல்வியும் பாதிப்படைவதோடு, அவர்களின் எதிர்கால இலட்சியங்களும், கொள்கைகளும், நேச மனப்பான்மையும் சீர்குலைக்கப்படுகின்றது.

●

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவன் செல்வன். இராஜரட்ணம் இட்ணராஜின் கருத்து:

கலவன் பாடசாலையில் கல்வி கற்பதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதில்லை என்று துணிந்து கூறலாம். ஒரே வகுப்பிலே இரு பாலாரும் கல்வி கற்பதனால்

# மாணவர் எண்ணம்

## எண்ணத்தில் மகிழ்வித்தவர்

வி. சந்திரகுமார்

மாணவர் மத்தியில் இலைமறைகாயாக இருந்து எழுத்தாற்றல் மிக்கவர்களின் படைப்புகளுக்கு இடமளித்து இத்துறையில் அவர்களை ஊக்குவிக்கவென ஆரம்பிக்கப்பட்ட மாணவர் எண்ணத்தில்: தமது படைப்புக்கள் மூலம் மாணவ மணிகளை மகிழ்வித்தவர்களைப் பற்றியும் அவர்களது எழுத்து, கலை உலக வாழ்வு பற்றியும் நாம் எல்லாரும் அறிய வேண்டாமா?

இந்த நோக்குடன் இங்கு ஆரம்பமாகும் இப்புதிய களத்தில் நாம் முதலில் சந்திக்கப் போபவர் எமக்கு நன்றாகவே அறிமுகமான வி சந்திரகுமார் அவர்களே.

சந்திரகுமார் என்றால் எம் மனத்தில் நிழலாடுவது 'கொரில்லா அரக்கன்' தான். அந்தச் சுவையான தொடர்நாவலைத் தந்து மகிழ்வித்த இவர் யாழ் மத்திய கல்லூரியில் உயர்தரவகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறார்.

எழுத்துத்துறையில் ஈடுபடுவதை விட சித்திரங்கள் வரைவதில் மிகுந்த ஈடுபாடுடையவர். இவரது சித்திரங்கள் எமது எண்ணத்திலும், சிரித்திரன், வேறு பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. சிறுவயதிலேயே இவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்ட சந்திரகுமார்; சிறந்த நாடகங்களையும் எழுதியுள்ளார்.

பாவனைகளை ஒருவருக்கொருவர் அறிந்துகொள்ளும்போது தவறான அபிப்பிராய பேதங்கள் தவிர்த்துக்கொள்ளப்படுகிறது. இதனால் மாணவ மாணவிகள் சகோதரர்கள் போன்ற உணர்வோடு நடக்கப் பழகிக் கொள்கின்றார்கள்.

எண்ணத்தில் தரமான சிறுகதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ள இவர் இவ்வப்போது மாணவர்களுக்குமாக எழுதினார். இவர் எழுதிய மணிக்கதை ஒன்று வேறு பத்திரிகையில் பிரசுரமாகி பலரின் பாராட்டைப் பெற்றது. பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருப்பதால் வேகமாக எழுத முடியவில்லை என்று கூறிவேதனைப்படும் சந்திரகுமாரின் பின்னால் நீண்டுநிற்கும் எதிர்காலம் எமக்கு நல்ல நம்பிக்கை யூட்டுகிறது.

# பங்கம் செய்த மடவாளொடு கோவில்கொண்ட பெருமான்

ஈழமணித்திருநாட்டின் வடமாகாணத்திலே மன்னார் மாவட்டத்தில் பாலாவி என்னும் தீர்த்தக் கரையிலே உள்ள திருத்தலம் கேதீஸ்வரமாகும். இத்தலம் நம்நாட்டில் பாடல்பெற்ற சிறப்பு வாய்ந்த திருத்தலமாகும். எம்பெருமானுடைய வரலாற்றுப் பெருமை மிகு கட்டுரையை பெருமானின் வருடாந்த மகோற்சவம் நடைபெற்று முடிந்த இவ்வேளையில் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாக அமைகிறது.

இத்தலம் மாதை எனவும் மாதோட்டம் எனவும் பெயர் பெற்ற ஊரில் அமைந்துள்ளது. மாந்தையில் பாலாவிக்கு அண்மையில் திருக்கோயிலைச் சூழ மாளிகைகள் நிலவின. அவ்விடம் இன்று உயர்ந்த மேடாய் மாளிகைத்திடல் என வழங்குகிறது. தென்னிந்தியாவின் தென்கோடியில் உள்ள இராமேஸ்வரத்தைப் போல இத்திருக்கேதீஸ்வரமும் சிறப்புற்று விளங்கியது. இவ்வாறாகப் 16ம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் போர்த்துக்கேயர் இக்கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கிக் கோயிற் பொருட்களை கொள்ளை கொண்டனர். கோயிற்கற்களை கொண்டு மன்னார் துறைமுகத்தைக் கட்டினர் என்பது வரலாறு.

இத்திருக்கோயில் கட்டட அமைப்பைப்பற்றி இதனை இடிக்கும் போது கூட நின்ற போர்த்துக்கேய அதிகாரி ஒருவன் "இந்த மாதிரியான வேலைப்பாடுகள் அமைந்த கட்டடம் இந்தியாவிலும் இல்லை. இக்கட்டிட {illegible} புராதன உரோமானியரின் தொடர்புகள் புலப்படுகின்றன." {illegible}

திருக்கேதீஸ்வரத்தைத் தேவபொந்து என்று கூறிய ஆறுமுக நாவலர் ஒன்று எழுதியுள்ளார். புனருத்தாரணத்தைப் பற்றி 1872ஆம் ஆண்டில் எழுதினார். பின்னர் பொதுமக்களிடம் ஓரளவு தொகைப் பணம் சேர்த்து 1894ம் ஆண்டில் அடியார்கள் திருக்கேதீஸ்வரம் அமைந்த இடத்தை காடுகளில் கண்டுபிடித்து சிவலிங்கம், பிள்ளையார், நந்தி முதலிய திருவுருவங்கள் மண்மூடப்பட்டிருந்து எடுக்கப்பட்டபோது சிவலிங்கப் பெருமானில் ஒரு சிறு பழுது உண்டாகி விட்டது. ஆகவே தான் அப்பெருமானின் திருவுருவத்தை இன்றுள்ள ஆலய வீதியில் வைத்துள்ளார்கள்.

பின் காசியில் இருந்து புதிய லிங்கம் கொணரப்பட்டு ஒரு சிறிய ஆலயம் அமைத்து 28-6-1903ல் மகாகும்பாபிஷேகம் செய்தார்கள். இதன்பின் 1948ல் திருக்கேதீஸ்வர புனருத்தாரண சபை ஒன்று கூடி பொதுமக்களிடம் பணம் சேகரித்து சபையாரின் பெருமுயற்சி காரணமாக 31-10-1960ல் இன்றுள்ள ஆலய சுற்றுப்பிரகாரங்கள் நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சிவ. தவநாயகன்

(யாழ். இந்துக் கல்லூரி)

'கண்டோஸ்'

## கொஞ்சம் சிரியுங்கள்

கந்தர்: யாரவர் அந்தப் பேச்சாளர்?... பேசும் போது தொடர்பின்றி வெட்டி வெட்டி பேசுகிறாரே?...

சுந்தர்: அவர் மின்சார அதிகாரியாம்!...

★

சந்திரன்: ஆமாம் நம்முடைய ராமுவை அவன் அப்பா வெட்டி வேலை பார்க்கிறாயே என்று திட்டிக் கொண்டிருப்பாரே அந்த ராமு இப்ப என்ன செய்கிறான்......

சிவா: அவன் இப்ப மின்சார அதிகாரி. மின்சாரத்தை சதா 'வெட்டி', 'வெட்டி' தள்ளி வெட்டி வேலை தான் பார்க்கிறான்!...

●

டாக்டர்: ஆமாம் இந்த நோயாளி மின்னதிர்ச்சியில் மயங்கிவிட்டாரென்று சொன்னீர்களே "கரண்ட்" சுவிச்சுக்குள் கையை வைத்து விட்டாரோ?

வந்தவர்: இல்லை மின் வெட்டு நாள் முழுவதும் உண்டு என்று சொன்னன் அதிர்ச்சியில் மயங்கி விட்டார்!...

வி. சந்திரகுமார்

யாழ். மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (கன்னுகம்)
தினசரி 4-45, 7-00, 9-45
சனி, ஞாயிறு 2-45
French Connection II

ஹரன் (சாவகச்சேரி)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-பாரதி
பூவும் பொட்டும்
(புதிய பிரதி)

வெற்றிகரமான 11-வது வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தொலைபேசி 466
தினசரி 10-30, 1-30, 4-30, 7-00
சுதாகர் - ராதிகா விஜயன் - ரதி
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

12-6 80 வரை மட்டும்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
ராமலிங்கம்-டிகிரி வைரத்தினம்- V. R. ஸ்ரீநடராசா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக் கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்
13-ந் திகதி முதல் ஞான ஒளி

6-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்)
தினசரி 10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
9-6-80 முதல் வழமையான தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் (இருவேடங்களில்) ஸ்ரீதேவி
கல்யாண ராமன் (கலர்)

The Most Successful and Adventurous Story for the Season.
SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, a.m 2-30 4-45 7-00 & 9-45 P m.
A BREATH - TAKING MOUNTAIN CLIMB AND HE FINDS HIS VICTIM?
DONT FORGET! THERE IS SANCTION FOR HIM TO PERFORM.
CLINT EASTWOOD
in
"THE EIGER SANCTION"
(Cinemascope—Color)

Manohara (Jaffna) Daily 5 Shows
BLAZING FLOWERS
(color) /Strictly for Adults/
A Violent Tale of Vengence and Passion

கடைசி 2 தினங்கள்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா - மஞ்சுளா
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்மன் கலர்)
அரிய சந்தர்ப்பம்! யாழ்ப்பாண மக்களுக்கு இதுவே கடைசி வாய்ப்பு காணத்தவறாதீர்கள்
10-6-80 முதல் சிவாஜி — சாவித்திரி
கை கொடுத்த தெய்வம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
பணக்காரக்குடும்பம்

லிடோ (யாழ்நகர்) போன் 7000
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி -லதா
ஞானக்குழந்தை
நெருக்கடியைத் தவிர்க்க பாடசாலைகள் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளவும்


## ராகு-கேது....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ராகு ஜென்மத்தில் இருப்பதும், கேது 7ல் சஞ்சரிப்பதும், அவ்வளவு நற்பலனைக் கொடாது போனாலும், 29-11-79 தொடக்கம் 2½ வருட சனி மாற்றம் 3ல் இருப்பதும் 29-8-79—19-9-80 வரையுள்ள இரண்டில் வியாழ பலனும் மிக நன்றாகும். 19-9-80 தொடக்கம் ஒருவருடத்திற்கு வியாழன் 3க்கு வருவது உகந்ததல்ல; பொதுப் பலன் நன்று.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1ம் கால்)

7½ சனி கடைக்கூறு நடக்கும் வேளையில் ராகு 12க்கு வருவது சிறிது வருத்தினும் கேது 6ல் இருப்பது நன்று. தற்போதைய வியாழ சுகம் ஜென்மத்தில் தங்கியிருந்து சாரத்தைக் கொடுத்தாலும் 19-9-80 தொடக்கம் குருபகவானின் இரண்டாமிடப் பெயர்ச்சி உங்களுக்கு மிகமிக நன்மையை அளிக்கும்.

### கன்னி

(உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1ம், 2ம்கால்)

11ல் ராகு மிக விசேட பலனை அளிக்கின்றது. 7½ நாட்டுச் சனியின் தொல்லை இதனால் குறையும். வியாழ, சனி மாற்றப் பலாபலன்கள் அவ்வளவு நல்லதல்ல. தெய்வ வழிபாடு சிறப்பாக சனி விரதம் பிடிப்பதுடன் நவக்கிரக நாயகர்களுக்கு அர்ச்சனை செய்வதும் நன்றேயாகும்.

### துலாம்

(சித்திரை, 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3)

பத்தில் ராகு 7½ச் சனியின் துன்பங்களையும் துயரங்களையும் ஓரளவு குறைக்கும். 4-ம் இட கேது உகந்ததல்ல. தற்போதைய 11-ம்இட வியாழன் நன்மையைக் கொடுப்பினும் 19-9-80 தொடக்கம் ஒரு வருடத்திற்கு குரு 12-ம் இடத்துக்கு வருவது அவ்வளவு நல்லதல்ல உங்கள் ஜாதகத்தில் வியாழன், சனி, கேது பிறக்கின்ற போது நன்மையளிக்கும் இடங்களில் இருப்பின் துன்பங்கள் அதிகம் ஏற்படமாட்டாது.

### விருச்சிகம்

(விசாகம் 4 ம் கால், அனுவும் கேட்டை)

சனி சிறந்த பலன்களைச் செய்வதால் 9ம் இடத்து ராகுவினால் ஏற்படும் கெடுதல்கள் உங்களைத் துன்பச் சூழலுக்கு இட்டுச் செல்லாது. 3ல் கேது மிக நன்று. வியாழன் பத்தில் இருப்பது அசௌகரியங்களைக் கொடுப்பினும் 19-9-80 ன் பின்னர் குரு 11ம் இடத்துக்கு வருவது சிறந்த பலாபலன்களை அனுபவிக்கப் போகின்றீர்கள்.

### தனு

(மூலம், பூராடம், உத்தராடம 1 ம் கால்)

ராகு 8 லும் கேது 2 லும் இருப்பது நன்றல்ல ஆனால் 9ம் இடத்து வியாழ சுகம் அதிகம் உண்டு. 12-8-80 ன் பின்னர் சனி பத்திலும் 19-9-80 ன் பின்னர் வியாழன் பத்தாம் இடத்துக்கு வருவதினாலும் மிகப் பெரிய நன்மைகளை அடைவீர்களானாலும் ராகு கேது மாற்றம் தீய பலாபலன்களின்றும் விடுபட நயினாதீவு நாகபூஷணி அம்மனையும், திருக்கேதீஸ்வர கேது பெருமானையும் உள்ளன்போடு வழிபட்டு வருக.

### மகரம்

(உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2)

9 மிடத்துச் சனி உங்களுக்கு நற்பலனை அளிக்கும் இக்காலத்தில் 7ல் ராகு ஜென்மத்துக் கேது பலன்கள் நன்றல்ல. அட்டமத்து வியாழனின் கொடிய செயல்களைத் தாக்கி விட்டீர்களேயானால் 19-9-80 தொடக்கம் உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்துக் கிடக்கின்றது.

### கும்பம்

(அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1, 2, 3)

6ம் இட ராகு உங்களுக்கு மிகச் சிறந்த நன்மைகளை அளிக்கவிருப்பதால் அட்டமத்துச் சனியின் ஆதிக்கம் குறைந்து காணப்படும் 12ல் கேது அவ்வளவு நன்றல்ல. தற்போதைய வியாழ மாற்றம் நன்று 19-9-80 தொடக்கம் வியாழன் 8 ம் இடத்துக்கு வருவதினால் தெய்வ வழிபாட்டுடன் செய்தொழில் பற்றி மிகமிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

### மீனம்

(பூரட்டாதி, 4 ம் கால், உத்தரட்டாதி, ரேவதி)

ராகு 5 ல், கேது 11 ல், இருப்பதால் மிகவும் சிறந்த பலாபலன்கள் ஏற்படப் போகின்றன 7ல் சனி 6ல் வியாழன் சிறிது துன்பத்தைக் கொடுப்பினும் 19-9-80 ன் பின்னர் வியாழன் 7 மிடத்துக்கு வருவது அதி சிறந்த பலனை அளிக்கும்.


வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நாகேஷ் - பாலையா
பாமா விஜயம்

தேவை
(1) குளிர்சாதனப்பெட்டி திருத்தக்கூடிய நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்
(2) லேத்வேலை, சைக்கிள், வாட்டர்பம்,பிற்றிங் வேலைகள் பழக விருப்பமுடையோர்.
கடிதமூலம் நற்சான்றிதழ்களோடு உடனே விண்ணப்பிக்கவும்.
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்.,
484, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்

நூற்றுக்கு நூறுவீதம் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட
"ஓரியன் சைக்கிள்கள்"
நாஷனல் 12V டைனமோ செற், B/90 சீற், ஒரிஜினல் கோபா கரியர், சைட் ஸ்ராண்ட் பெல், பம்ப் முதலியவைகளுடன்
ரூபா 1650/- மட்டுமே
கவர்ச்சிகரமான பச்சை, சிவப்பு, நீலம் முதலிய நிறங்களிலும் உண்டு. ஆடி '80 முற்பகுதியில்விற்பனைக்கு வரவுள்ளது.
வியாபாரிகளுக்கு விசேட கழிவுடன் கொடுக்கப்படும்.
தயவுசெய்து
முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்.,
484, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.


## சுங்க அதிகாரியிடம் சிக்கினார்

(மலே ஞர்)

தலைமன்னார் பிரயாணச் சுங்கப் பரிசோதனையின்றிக் கைவசப் பெட்டியைக் கடத்திச்செல்ல முயற்சித்த நபர் ஒருவர் தலைமன்னார் சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

கொழும்பு வாசியான இவர் இந்தியாவுக்குச் செல்வதற்கென தலைமன்னாருக்கு வந்தாரெனக் கூறப்படுகிறது. இவர் கடத்திச் செல்ல முயற்சித்த பெட்டி சுங்கப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு இந் நபருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ)

## பச்சிலைப் பள்ளியில் சர்வதேச தர்ஷண இயக்கம் உதவி

(சாவகச்சேரி நிருபர்)

சர்வதேச தர்ஷண இயக்கத்தின் உதவியுடன் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயக்கச்சி என்னுமிடத்தில் உள்ள கோவில் வயல் கிராமத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பங்களிடையே வளர்ப்பு ஆடு கோழி வளர்ப்பு பயிர்ச்செய்கையை அறிமுகம் படுத்தப்பட்டுள்ளது இதற்கான ஏற்பாடுகளை பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் திரு. சிட்னர், கோவில் வயல் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் மூலம் செய்துள்ளார்.

இத்திட்டத்திற்கு சர்வதேச தர்ஷண இயக்கம் 30 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இருந்து 40 குடும்பங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 750 ரூபாவுக்குள் பெறுமதியான ஆடுகள், கோழிகள், பயிர்ச்செய்கைக்குத் தேவையான சேமாவலை, இட்பில் இப்பில் விதைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதற்காகத் கோவில் வயல் கிராமத்தில் இவை மூலம் வரும் வருமானத்தை அக்குடும்பங்கள் அனுபவிப்பதுடன் ஆடு வளர்ப்பின் மூலம் பெறப்படுகின்ற முதலாவது ஆட்டுக்குட்டியை இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காகக் கொடுத்து உதவவேண்டும். இந்த ஆட்டுக்குட்டிகள் மேலும் 40 குடும்பங்களுக்கு அடுத்த வருடம் அன்பளிப்புச்செய்யப்படவிருக்கிறது. (வ)

## ஒரிஸ்ஸா முதல்வர் மத்திய மந்திரி

(புதுடில்லி)

ஒரிஸ்ஸாவின் அரசு அமைக்குமாறு இந்திய மத்திய சுற்றுலா சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. ஜே. பி. பட்நாயக்கை மாநில கவர்னர் கேட்டுள்ளார்.

திரு. பட்நாயக் மாநில இந்திரா காங்கிரஸ் தலைவராக நேற்று தெரிவுசெய்யப்பட்டார். (இ)

## பாடவிதான......

(5ம் பக் . தொடர்ச்சி)

பிரதான கல்வி அதிகாரிகள்- 3.
கல்வி அதிகாரிகள்- 12
மற்றும் அதிகாரிகள்- 19.
ஆசிரிய ஆலோசகர்கள்-100

மேற்படி நிலையத்திற்கான ஆலோசகர்கள் விளம்பர மூலம் அறிவிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். படிப்படியாக இம்முறை மாற்றப்பட்டு கல்விப்பணிமனைகளது சிபார்சின் பேரில் நேர்முகப் பரீட்சை மூலமாகத் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்டவர்களுக்குச் சிறந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டன பின்பு அவர்களுள் தெரிவு செய்யப்பட்ட சிறந்த ஆசிரியர்களே பயிற்சி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர் இம்முறை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் பட்டுவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களுக்கு
ஓர் நற்செய்தி......
CIC பெயின்ற் வகைகளான
டியுகோ - DUCO
டியுலக்ஸ் - DULUX
பென்றலைற் - PENTALITE
சகல வர்ணங்களிலும்
கிடைக்கிறது
கதிர் ஹாட்வெயர்ஸ்
( TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்:7130


# 10 யாழ். பஸ் டிப்போ ஊழியருக்கும் மீண்டும் வேலை

(யாழ்ப்பாணம்)
தேசிய எதிர்ப்பு தின மறியலில் ஈடுபட்டதற்காக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட யாழ். பஸ் டிப்போவைச் சேர்ந்த 10 ஊழியர்களும் மீண்டும் நிபந்தனைகள் எதுவுமின்றி வேலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வடபிரதேசச் செயலாளர் திரு. அ. வைத்திலிங்கம், வட பிராந்திய போக்கு வரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகராவுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே இவர்கள் 10 பேரும் மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டனர். இவ்விவகாரம் தொடர்பாக வேறு சில தொழிற் சங்கங்களும் நிறுவனங்களும் திரு. குணசேகராவுடன் தொடர்பு கொண்டிருந்தன.

வி. ரவிராஜ், கே. திராசேந்திரம், கே. அரியரத்தினம், சி. தர்மகுலசிங்கம், கே. சிவஞானசுந்தரம், எம். ஞானேஸ்வரன், எஸ். சுவலோகநாதன், என். அந்தோனிப்பிள்ளை, க. தெய்வேந்திரம், எம். சண்முகநாதன் ஆகியோரே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ)


அரியதோர் சந்தர்ப்பம்
மீண்டும் வந்துவிட்டது
சொப்பிங் பேக் -/50
100 பேக் 27/50
வியாபாரிகளுக்கு
விசேஷ கழிவு-தவறவிடாதீர்கள்
சீக்கோ டிரேடர்ஸ்
சிலோபெக்-விநியோகஸ்தர்கள்
43, நவீன சந்தை,யாழ்ப்பாணம்.


# நல்லதொரு நாட்டிய நிகழ்ச்சி!



நல்லதொரு நடன நிகழ்ச்சியை இலவசமாகப் பார்த்து மகிழும் சந்தர்ப்பம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ் ரசிகர்களுக்குக் கிடைத்தது.

மிகக் குறுகியகால அறிவிப்புடனேயே இந்த நிகழ்ச்சி ஏற்பாடாகி இருந்தபோதிலும் அன்று வேம்படி மகளிர் கல்லூரி மண்டபம் நிறைந்து வழிந்ததைப் பார்த்தபோது நல்ல நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தவறவிட்டுவிட நமது ரசிகர்கள் விரும்புவதில்லை என்பது புரிந்தது.

கலைஞர்கள், அறிஞர்கள், சாதாரண ரசிகர்கள் மாத்திரமின்றி நிறையச் சிறுவர் சிறுமிகளும் குழுமியிருந்தனர். ஆனால் மண்டபம் சப்தமின்றி அமைதியாகவிருந்தது.

திருமதி சுடர்க்கொடி பத்மா ராமநாதன் தமது கணவர் திரு. இராமநாதன், குழந்தை இராசராசேசுவரி ஆகியோருடன் நமது வீரமணி ஐயரின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வைத்திய கலாநிதி சோமசுந்தரம் அவர்களும், வைத்திய கலாநிதி பொ. ஸ்ரீகாந்தன் தம்பதியும் அந்த நாட்டிய நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்திருந்தார்கள்.

பரதநாட்டியத்தில் மாத்திரமல்ல, ஏனைய இந்திய நாட்டிய வகைகளிலும் பத்மா சிறந்த தேர்ச்சி உள்ளவரென்பது நிகழ்ச்சியின் போது தெளிவாகத் தெரிந்தது.

ஒருசில அயிட்டங்களே இடம்பெற்றாலும் அத்தனையும் மணிமணியாக மனதில் பதிவதாய் இருந்தன. நவரச ராமாயணத்தைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டலாம்.

இராமாயணத்தில் கட்டம் கட்டமாக நிகழும் சம்பவக் கோர்வைகளைச் சொல்லி அவ்வப்போது இராமனுக்கு ஏற்படும் மனோபாவங்களை நவரசப் பாவமுத்திரைகளாகப் பத்மா அபிநயித்துக்காட்டிய போது, முழு ராமகாதையை யுமே மேடையில் பார்த்து இலயித்த திருப்தி ஏற்பட்டது.

தாயும், சேயும் சேர்ந்து அளித்த தசாவதாரம் இன்னொரு சிறப்பம்சம். குழந்தை ராஜராஜேசுவரி தன் தாய்க்கு இணையாக ஈடுகொடுத்து ஆடியது பலரையும் கவர்ந்தது.

இடைவேளையின்போது பத்மாவின் சிறப்புகள் பற்றிக் குறிப்பிட்ட வீரமணி ஐயர், வசிஷ்டர் வாயால் ராஜரிஷி என்பது போல பிரபல விமர்சகர் சுப்புடுவினாலேயே வியந்து பாராட்டப்பட்டவர் பத்மா என்று குறிப்பிட்டார்.

திரு. ராம்குமாரசாமி வரவேற்புரையில் திருமதி பத்மாவின் முகபாவங்கள் மிக அற்புதமாக இருப்பதாகப் பாராட்டினார். ஒருவரே பல நாட்டிய வகைகளில் தேர்ச்சி பெற்றுவிளங்குவதை அவர் வியந்து குறிப்பிட்டார்.

மகள் ராஜராஜேசுவரி வருங்காலத்தில் தாயாரையும் விஞ்சிவிடக்கூடுமென்றும் அதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும் ராம் பாராட்டியது ரசிகர்களின் ஏகோபித்த கருத்தை வெளியிட்டதாக அமைந்தது எனலாம்.

"பேறு

# 'ஈழநாடு' செய்தி சரியானதே

(யாழ்ப்பாணம்)
யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடந்த பெற்றோர் கூட்டத்தில் வடமாநில கல்வி அதிபர் திரு. மாணிக்கவாசகர் பேசிக் கொண்டிருந்த சமயம் சபையிலிருந்த பெற்றோர்களுள் ஒருவரான திரு. போல் எழுந்து "அதிபர் மாறிப் போக சம்மதித்துள்ளார்" என மாணவர் மத்தியில் அன்று நீங்கள் கூறினீர்கள். அது பத்திரிகைகளிலும் வந்தது. பின்னர் அப்படிப் பேசவில்லை என மறுத்திருக்கிறீர்கள். யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் அப்போது நின்றார். நீங்கள் சொன்னது உண்மை. பலர் நேரில் கேட்டுள்ளனர். 'ஈழநாடு' பத்திரிகையில் முதலில் வந்த செய்தி சரியானதே. அந்தவாக்குறுதிக்குஎன்ன நடந்தது? என்று கேட்டார் இதற்கு கல்வி அதிபர் எவ்வித பதிலும் அளிக்கவில்லை.

சபையிலிருந்த ஆசிரியையான திருமதி தேவராசா, "24 மணி நேரத்தில் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாதீர்கள், ஓர் அதிபரை இடமாற்றம் செய்ய இரண்டு வாரம் போதாதா?" என்று கல்வி அதிபரைக் கேட்டபோது அதற்கும் அவர் எவ்வித பதிலும் அளிக்கவில்லை.

மாணவருக்குக் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுங்கள். அதிபரை இடமாற்றம் செய்யுங்கள் என பின்வரிசையிலிருந்த சில பெற்றோர்கள் கூறினார்கள். (க)

# பெற்றோர்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வாசகர், யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

# கவுணாவத்தை கோயிலில் வெட்டப்பட்ட நிலையில் ஆடு

(மாவிட்டபுரம்)
மாவிட்டபுரம் கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் நேற்றுக் காலை ஆடு ஒன்று வெட்டப்பட்ட நிலையில் கிடக்கக் காணப்பட்டது.

இது குறித்து கோவில் முகாமையாளர் திரு. முருகர் செல்லக்குட்டி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் புகார்செய்ததை அடுத்து பொலிசார் இனந்தெரியாத நபர்களினால் வெட்டப்பட்ட அந்த ஆட்டைப்புதைத்தனர்.

இந்த ஆலயத்தின் 8-ம் மடைத்தினமான நேற்று முன்தினமிரவு 10 மணி வரை பொங்கல் மட்டும் நடைபெற்றது. (இ)


இன்று....யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
ஈழத்தின் பிரபல நாட்டியக் கலைஞர்களான
வேல். ஆனந்தன் நடனக்குழுவினர்
அளிக்கும்
தேரோட்டி மகன்
(நாட்டிய நாடகம்)
ஒரு பிரமாண்டமான புதிய தயாரிப்பு
பிரவேசசீட்டுக்கள்: ரூபா 25/-,10/-,05/-
(மண்டப வாயிலில்) 5978


# மரண அறிவித்தல்

## கனகசபை யோகானந்தம்

(இளைப்பாறிய கலால் இலாகா பிரதம பரிசோதகர்)

செல்வமணியின் அன்புக் கணவரும், செல்வம். யோகானந்தம் (யுனைட்டட் கிங்டம் எஞ்ஜினியரிங்) யோகராணி (பிரிட்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், திரிபுரசுந்தரி (கனடா) இராமநாதன் (பொறியியலாளர், பிரிட்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வாழினி, நந்தினி, யதுவன், ராதினி ஆகியோரின் அன்புப் பேரனுமாகிய கனகசபை யோகானந்தம் அவர்கள் காலமானார். அன்னாரது பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணியளவில் அவரது 294, கண்டி வீதி இல்லத்தில் இறுதிக் கிரியைகளுக்காக வைக்கப்பட்டு தகனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 5076

# பேராதனையில் மிருகவைத்திய பீடம்

(பேராதனை)
பேராதனை பல்கலைக்கழகத்தில் மிருக வைத்தியத்துறைக்கான பேராதனைபீடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

புதிய பேராதனைபீடத்தலைவராக பேராசிரியர் எஸ்.எஸ் பெரிணன்டோ பதவி ஏற்றுள்ளார். (இ)


டில்கா றேடியோ அன் ரிவி ரெக்னிசன்ஸ்
நடாத்திய தமிழக சட்டமன்றத்
தேர்தல் போட்டி 1980.

இப்போட்டியில் பங்கு கொண்ட ஆயிரக் கணக்கான போட்டியாளர்களில் எவரும் சரியான விடையளிக்கவில்லை. எனினும், அ. இ. அ. தி. மு. க. கூட்டணியே ஆட்சி அமைக்கும் என்று எழுதிய 10 அதிர்ஷ்டசாலிகளுக்கு, நடுவர்களின் முடிவுக்கமைய, பரிசு வழங்கப்படுகின்றது.

பரிசு பெற்றோர் விபரம்:
1. பி. கஜேந்திரா, 15, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
2. என். கே. சுந்தரரூபன், 33, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
3. என். திலகவதி, கப்பண்டா கடவை வீதி, சுன்னாகம்.
4. பொ. கனககுலசிங்கம், கடுகதி விளையாட்டுக் கழகம், பாரதிலேன், பண்டத்தரிப்பு.
5. இ. பாரதி, 784, பலாலி வீதி, திருநெல்வேலி.
6. கா. பீதாம்பரம், திட்டமிடல் கிளை, கச்சேரி, மன்னார்.
7. என். ஜெயலிங்கம், மீசாலை.
8. எஸ். இராஜகுலசிங்கம், பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
9. க. கைலாயபிள்ளை, சுளிபுரம்.
10. செல்வி ஐ. ஸ்ரீ சாந்தினி, 12, விதானை யார் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிகள், தம்மை உறுதிப்படுத்தும் அடையாள அட்டையைக் காண்பித்து பரிசுத் தொகையை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் நடுவர்களுக்கும் எமது நன்றிகள்.

டில்கா ரேடியோ அன் ரிவி ரெக்னிசன்ஸ்
202, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலைய முன்பாக, மேல் மாடி)
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தாரால் ... வீதி 163-ம் இலக்க அச்சகத்தில் ஜூன் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Post office Sri Lanka under No. CE/8948/ 78; The Eelanaadu, Post Box No. 49, Telegram: "Eelanaadu Phone: 389

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org